அல்லாஹ்வின் கட்டளை

قُلۡ اِنۡ کُنۡتُمۡ تُحِبُّوۡنَ اللّٰہَ فَاتَّبِعُوۡنِیۡ یُحۡبِبۡکُمُ اللّٰہُ وَیَغۡفِرۡ لَکُمۡ ذُنُوۡبَکُمۡ ؕ وَاللّٰہُ غَفُوۡرٌ رَّحِیۡمٌ ○

நீர் கூறுவீராக: (மக்களே!) நீங்கள் அல்லாஹ்வை நேசிப்பவர்களாயின் என்னைப் பின்பற்றுங்கள். (அப்போதுதான்) அல்லாஹ்(வும்) உங்களை நேசிப்பான். உங்களுடைய பாவங்களை உங்களுக்காக மன்னிக்கவும் செய்வான். அல்லாஹ் மிக்க மன்னிப்பவனும் மீண்டும் மீண்டும் அருள் செய்பவனுமாவான். (3:32)

بسم اللہ الرحمن الرحیم    نحمدہ ونصلی علی رسولہ الکریم    وعلی عبدہ المسیح الموعود

وَلَقَدۡ نَصَرَکُمُ اللّٰہُ بِبَدۡرٍ وَّاَنۡتُمۡ اَذِلَّۃٌ

தொகுதி 4

வருடாந்திர சந்தா ரூபாய் 500/-

# பதர்

வார இதழ் - காதியான்

Weekly BADAR Qadian TAMIL

இதழ் 9

ஆசிரியர் முஸ்ஸம்மில் அஹ்மது

துணை ஆசிரியர் அ.கலீல் அஹ்மது

21 ஜமாதிஸ் ஸானி 1440 ஹிஜ்ரி கமரி 28 தப்லீக் 1398 ஹிஜ்ரி ஷம்ஸி
28 பிப்ரவரி 2019


**அஹ்மதிய்யா செய்திகள்**

ஸய்யிதுனா ஹஸ்ரத் அமீருல் முஃமினீன் ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் அய்ய –தஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ் அவர்கள் அல்லாஹ்வின் அருளால் நலமுடன் இருந்து வருகின்றார்கள். அல்ஹம்துலில்லாஹ். ஜமாஅத் சகோதரர்கள் ஹுஸூர் அவர்களின் சிறந்த உடல் நலத்திற்காகவும், அவர்களின் நீண்ட ஆயுளுக்காகவும், அவர்களது உயர்வான நோக்கங்களில் வெற்றி கிடைப்பதற்காகவும், அவர்களது சிறப்பான பாதுகாப்பிற்காகவும், தொடர்ந்து துஆ செய்து வாருங்கள். அல்லாஹ் ஒவ்வொரு நொடியும் ஹுஸூர் அவர்களது பாதுகாவலனாகவும் உதவி –யாளனாகவும் இருப்பானாக. மேலும் அவர்களுக்கு உதவி செய்வானாக! ஆமீன்.

**ஒருவர் இறைவன் மீது அன்பு வைத்துள்ளார் என்றால் அவர் ஒரு எரிந்து கொண்டிருக்கின்ற நெருப்பின் வாழ்க்கையை வாழ்வாரா? ஒரு ஆட்சியாளரின் நண்பர் உலகத் தொடர்பின் காரணமாக எல்லா விதமான சொர்க்கத்தின் வாழ்க்கையை வாழ்கின்றார். அவ்வாறிருக்கும்போது அல்லாஹ்வின் நண்பர்களுக்காக ஏன் சுவர்க்கத்தின் வாசல் கதவுகள் திறக்கப்படக் கூடாது**

## வாக்களிக்கப்பட்ட மஸீஹும் மஹ்தியுமான ஹஸ்ரத் அக்தஸ் மிர்ஸா குலாம் அஹ்மது காதியானி [அலை] அவர்களின் கூற்றிலிருந்து...

### இறையச்சமுடையவரிடம் எவர் வந்தாலும் அவரும் காப்பாற்றப்படுகின்றார்

மக்கள் அதிகமான துன்பங்களில் பிடிக்கப்படுகின்றார்கள். ஆனால் இறையச்சமுடையவர்கள் காப்பாற்றப்படுகின்றார்கள். மாறாக, அவர்களிடம் எவர் வந்தாலும் அவரும் காப்பாற்றப்படுகின்றார். துன்பத்திற்கான எந்தவொரு வரையறையும் கிடையாது. மனிதன் தன்னுள் சுயமே எந்த அளவுக்குத் துன்பத்தை கொண்டுள்ளான் என்றால் அதை கணிக்கவே இயலாது. நோயை மட்டும் நாம் பார்ப்போமேயானால் ஆயிரக்கனக்கான நோய்கள் துன்பங்களைத் உருவாக்குவதற்குப் போதுமானவையாக இருக்கின்றன. ஆனளால் எவர் இறையச்சத்தின் கோட்டையில் இருக்கின்றாரோ அவர் அதிலிருந்து பாதுகாப்பாக இருக்கின்றார். மேலும் அவர் பறவைகளும், விலங்களும் இருக்கின்ற அந்த காட்டிலிருந்து வெளியே இருக்கின்றார்.

### இறையச்சமுடையவருக்கு இவ்வுலகிலேயே நற்செய்திகள் கிடைக்கின்றது

இறையச்சமுடையவருக்கு மேலும் ஒரு வாக்குறுதியும் உள்ளது.

لَهُمُ الْبُشْرٰى فِى الْحَيٰوةِ الدُّنْيَا وَفِى الْاٰخِرَةِ (10:65)

இறையச்சயமுடையவருக்கு இவ்வுலகிலேயே கனவுகள் மூலமாக நற்செய்திகள் கிடைக்கின்றன. மாறாக, இதை விட அதிகமாக அவர்கள் இறைவனோடு உரையாடுவதற்கும், இல்ஹாம்களைப் பெறுவதற்கும் தகுதியானவர்களாக ஆகி விடுகின்றனர். இறைவனோடு உரையாடுவதற்கான பாக்கியத்தை அவர்கள் பெறுகின்றனர். அவர்கள் மனித ஆடையிலேயே மலக்குகளைப் பார்த்து விடுகின்றனர். அல்லாஹ் கூறுகின்றான்:

اِنَّ الَّذِيْنَ قَالُوْا رَبُّنَا اللّٰهُ ثُمَّ اسْتَقَامُوْا تَتَنَزَّلُ عَلَيْهِمُ الْمَلٰٓئِكَةُ (41:31)

அதாவது எவர் எங்களது இறைவன் அல்லாஹ் என்று கூறி அதில் நிலைத்து நிற்கின்றார்களோ அத்தகைய நபர்கள் சோதனையின்போது நான் எனது நாவினால் செய்த வாக்குறுதியை நடைமுறைப்படுத்தியும் முழுமை செய்து காட்டுகின்றேன் என்று வெளிப்படுத்திக் காட்டுகின்றனர்.

### சோதனைகள் வருவது அவசியமாகும்

ஏனென்றால் சோதனைகள் வருவது அவசியமாகும். இந்த வசனம் இதையே சுட்டிக் காட்டுகின்றது.

اَحَسِبَ النَّاسُ اَنْ يُّتْرَكُوْٓا اَنْ يَّقُوْلُوْٓا اٰمَنَّا وَهُمْ لَا يُفْتَنُوْنَ (29:3)

அல்லாஹ் கூறுகின்றான்: எவர்கள் எங்கள் இறைவன் அல்லாஹ் என்று கூறி அதில் நிலைத்து நிற்பார்களோ அவர்கள் மீது வானவர்கள் இறங்குவார்கள்.

வானவர்கள் உயிரைக் கைப்பற்றுவதற்கு மட்டுமே இறங்குவர் என்று விரிவுரையாளர்கள் கூறுவது தவறாகும்.

இதன் பொருள் என்னவென்றால், எவர் உள்ளத்தை தூய்மையாக்கி, அல்லாஹ்விடமிருந்து தூரம் விலக்கி வைக்கின்ற அசுத்தங்களிலிருந்து தமது உள்ளத்தை விலக்கி வைக்கின்றார்களோ அவர்களிடம் இறைவனது இல்ஹாம் வருவதற்கான ஒரு தொடர் உருவாகி விடுகின்றது. இல்ஹாமிற்கான தொடர் ஆரம்பமாகி விடுகின்றது.

பிறகு இறையச்சமுடையவரின் அந்தஸ்தைப் பற்றி அல்லாஹ் பிறிதோரிடத்தில் கூறுகின்றான்:

اَلَآ اِنَّ اَوْلِيَآءَ اللّٰهِ لَا خَوْفٌ عَلَيْهِمْ وَلَا هُمْ يَحْزَنُوْنَ (10:63)

அதாவது எவர்கள் அல்லாஹ்வின் நண்பர்களாக இருக்கின்றார்களோ அவர்களுக்கு எந்தக் கவலையும் கிடையாது. எவருக்கு இறைவன் பாதுகாவலனாக ஆகி விடுகின்றானோ அவருக்கு எந்த துன்பமும் ஏற்படுவதில்லை. இறைவன் நண்பனாகி விட்டால் பிறகு எதிர்க்கக்கூடிய எவராலும் அவருக்குத் தீங்கிழைக்க முடியாது. மேலும் அல்லாஹ் கூறுகின்றான்:

وَاَبْشِرُوْا بِالْجَنَّةِ الَّتِىْ كُنْتُمْ تُوْعَدُوْنَ (41:31)

அதாவது உங்களுக்கு வாக்குறுதியளிக்கப்பட்ட சொர்க்கத்திற்காக நீங்கள் மகிழ்ச்சியடையுங்கள்.

திருக்குர்ஆனிலிருந்து போதனைகளிலிருந்து மனிதனுக்கு இரண்டு சொர்க்கம் இருக்கின்றன என்பது தெரிய வருகின்றது. எவர் ஒருவர் இறைவன் மீது அன்பு வைத்துள்ளார் என்றால் அவர் ஒரு

*(தொடர்ச்சி கடைசிப் பக்கம்...)*

பிரிண்டர் மற்றும் பப்ளிஷரான ஜமீல் அஹ்மது நாஸிர் அவர்கள் காதியானிலுள்ள ஃபஸ்லே உமர் அச்சகத்தில் அச்சிட்டு காதியானிலுள்ள பதர் பத்திரிகை அலுவலகம் மூலம் இதனை வெளியிட்டுள்ளார்.
Proprietor Nigran Badar Board Qadian

# ஜுமுஆ பேருரை

**ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அன்பிற்குரியவர்களின் பெயர்களை உயிருடன் வைப்பதற்காக இவர்களின் பெயரை தமக்கு நெருக்கமானவர்களுக்குப் பெயராக வைத்திருக்கலாம்**

**அல்லாஹ்வின் திருப்தியை பெறுவதற்காக ஒவ்வொரு நொடியும் நிம்மதியற்று இருந்த, கலப்பற்றத் தன்மை மற்றும் விசுவாசத்தின் உயர் தகுதியைப் பெற்றிருந்த பத்ர் போரில் கலந்து கொண்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்களான ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ், ஹஸ்ரத் சுலைம் பின் அம்ர் அன்ஸாரி, ஹஸ்ரத் சுலைம் பின் ஹாரிஸ் அன்ஸாரி, ஹஸ்ரத் சுலைம் மின் மில்ஹான் அன்ஸாரி, ஹஸ்ரத் சுலைம் பின் கைஸ் அன்ஸாரி, ஹஸ்ரர் சாபித் பின் சஃலபா, ஹஸ்ரத் சிமாக் பின் சஅது, ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ் பின் ரியாப், ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் பின் ஹுனைஸ், ஹஸ்ரத் முஃபது பின் அப்பாத், ஹஸ்ரத் அதீ பின் அபீ ஸக்மா அன்ஸாரி, ஹஸ்ரத் ரபீஃ பின் இயாஸ், ஹஸ்ரத் உமைர் பின் ஆமிர் அன்ஸாரி, ஹஸ்ரத் அபூ ஸினான் பின் முஹ்ஸின், ஹஸ்ரத் கைஸ் பின் அஸ் ஸகன் அன்ஸாரி, அபுல் யஸர் கஅப் பின் அம்ர் ரிழ்வானுல்லாஹி அலைஹிம் ஆகியோர் பற்றிய ஈமானுக்கு வலுவூட்டக்கூடிய நற்குறிப்புகள்**

செய்யிதுனா அமீருல் முஃமினீன் ஹஸ்ரத் மிர்ஸா மஸ்ரூர் அஹ்மது ஐந்தாவது கலீஃபத்துல் மஸீஹ் (அய்யதஹுல்லாஹுத்தஆலா பினஸ்ரிஹில் அஸீஸ்) அவர்கள் **இலண்டனிலுள்ள பைத்துல் ஃபுதூஹ் பள்ளிவாயிலில் 25 ஜனவரி 2018** அதாவது ஹிஜ்ரி ஷம்ஸி 1397 -ஆம் ஆண்டு **சுலஹ்** மாதம் **25 ஆம் தேதி** ஆற்றிய **ஜுமுஆ பேருரை**

اَشْهَدُ اَنْ لَّا اِلٰهَ اِلَّا اللّٰهُ وَحْدَهٗ لَا شَرِيْكَ لَهٗ وَاَشْهَدُ اَنَّ مُحَمَّدًا عَبْدُهٗ وَرَسُوْلُهٗ

اَمَّا بَعْدُ فَاَعُوْذُ بِاللّٰهِ مِنَ الشَّيْطٰنِ الرَّجِيْمِ

بِسْمِ اللّٰهِ الرَّحْمٰنِ الرَّحِيْمِ-

اَلْحَمْدُ لِلّٰهِ رَبِّ الْعٰلَمِيْنَ-الرَّحْمٰنِ الرَّحِيْمِ- مٰلِكِ يَوْمِ الدِّيْنِ-اِيَّاكَ نَعْبُدُ وَاِيَّاكَ نَسْتَعِيْنُ-

اِهْدِنَا الصِّرَاطَ الْمُسْتَقِيْمَ-صِرَاطَ الَّذِيْنَ اَنْعَمْتَ عَلَيْهِمْ ۙ

غَيْرِ الْمَغْضُوْبِ عَلَيْهِمْ وَلَا الضَّآلِّيْنَ

இன்று நான் கூறப்போகின்ற பத்ர் போர் சஹபாக்களில் முதலாவது சஹாபியின் பெயர் ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ் (ரலி) ஆகும். ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ் அவர்கள் குரைஷிகளைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். அன்னாரின் தாயார் பெயர் சுஹலா பின்த் ஹுஸாயி ஆகும். மதீனா ஹிஜ்ரத் செய்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ் மற்றும் முன்ஸிர் பின் முஹம்மது ஆகியோரிடையே சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தி இருந்தார்கள்.

வேறு சில அறிவிப்புகளில் சுஃப்யான் பின் நஸ்ர் அவர்களுடன் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தி இருந்ததாக வருகின்றது. ஹஸ்ரத் துஃபைல் பின் ஹாரிஸ் தமது சகோதரரான ஹஸ்ரத் உபைதா மற்றும் ஹுஸைன் அவர்களுடன் பத்ர் யுத்தத்தில் பங்கு பெற்றிருந்தார்கள். அதே போன்று உஹது போர் மற்றும் அகழ் போர் உட்பட அனைத்து யுத்தங்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெறும் பாக்கியத்தைப் பெற்றார்கள். அன்னாரின் மரணம் ஹிஜ்ரி 32–ஆம் ஆண்டு 70 வது வயதில் நிகழ்ந்தது.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 74 துஃபைல் பின் ஹாரிஸ் – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 38 துஃபைல் பின் ஹாரிஸ் – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இரண்டாவது சஹாபி, ஹஸ்ரத் சுலைம் பின் அம்ரு அன்ஸாரி ஆவார்கள். அன்னாரின் தாயாரின் பெயர் உம்மே சுலைம் பின்த் அம்ரு ஆகும். அன்னார் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் குடும்பமான பனூ சலமா கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். வேறு சில அறிவிப்புகளில் அன்னாரின் பெயர் சுலைமான் பின் அம்ரு என்றும் வருகின்றது. அன்னார் உக்பா என்ற இடத்தில் 70 நபர்களுடன் பைஅத் செய்தார்கள். பத்ர் மற்றும் உஹது யுத்தத்தில் பங்கு பெற்றார்கள். உஹது போர் சந்தர்ப்பத்தில் ஷஹீதானார்கள். அன்னாருடன் அன்னாரின் அடிமையான அன்தரா அவர்களும் இருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 545 சுலைம் பின் அம்ரு (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 435 சுலைம் பின் அம்ரு (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து நான் கூறப்போகின்ற சஹாபியின் பெயர் ஹஸ்ரத் சுலைம் பின் ஹாரிஸ் அன்ஸாரி ஆகும். அன்னார் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் குடும்பமான பனூ தீனார் கோத்திரத்தை சார்ந்தவர்களாக இருந்தார்கள். அன்னாருடைய குடும்பம் பனூ தீனார் கோத்திரத்தின் அடிமைகளாக இருந்தது என அன்னாரைப் பற்றி கூறப்படுகிறது. மேலும் ஹஸ்ரத் ஸஹ்ஹாக் பின் ஹாரிஸ் அவர்களின் சகோதரர் ஆவார்கள் என்றும் கூறப்படுகின்றது. எவ்வாறிருப்பினும் நமக்கு கிடைத்த தகவலின் அடிப்படையில் இரண்டு விஷயங்களும் இடம் பெற்றுள்ளன. அன்னார் பத்ர் யுத்தத்தில் பங்கு பெற்றார்கள். உஹது யுத்தத்தில் ஷஹாதத் அந்தஸ்தை பெற்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 543 சுலைம் பின் ஹாரிஸ் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து சுலைம் பின் மில்ஹான் அன்ஸாரி ஆவார்கள். அன்னாரின் தாயார் முலைகா பின்த் மாலிக் ஆவார். ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் அவர்களின் மாமாவும் ஆவார்கள். ஹஸ்ரத் உம்மே ஹராம் மற்றும் ஹஸ்ரத் உம்மே சுலைம் ஆகியோரின் சகோதரரும் ஆவார்கள். ஹஸ்ரத் உம்மே ஹராம் ஹஸ்ரத் உபாதா பின் சாமித்தின் மனைவி ஆவார்கள். ஹஸ்ரத் உம்மே சுலைம் ஹஸ்ரத் அபூ தல்ஹா அன்ஸாரியின் மனைவி ஆவார்கள். அவர்களின் மகனான ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சேவகராக இருந்தார். அன்னார் பத்ர் மற்றும் உஹது யுத்தத்தில் தமது சகோதரரான ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹானுடன் பங்கு பெற்றிருந்தார்கள். அவர்கள் இருவருமே பிஃரே மவூனா சம்பவத்தில் ஷஹீதானார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 546 சுலைம் பின் மில்ஹான் (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 91 சுலைம் பின் மில்ஹான் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹிஜ்ரத் செய்த பிறகு 36–வது மாதத்தில் ஸஃபர் மாதத்தில் பிஃரே மவூனா என்ற இடத்தை நோக்கி ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ரு அஸ்சாஇதி அவர்களின் குழு அனுப்பப்பட்டது. ஆமிர் பின் ஜாஃபர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார். மேலும் அன்னாருக்கு அன்பளிப்பு வழங்க விரும்பினார். ஆனால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அதனைப் பெற மறுத்து விட்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவருக்கு இஸ்லாத்திற்கு அழைப்பு விடுத்தார்கள். ஆனால் அவர் ஒப்புக் கொள்ளவில்லை. மேலும் இஸ்லாத்தை விட்டு விலகிச் செல்லவும் இல்லை.

ஆமிர் கூறினான்: நீங்கள் உங்களது சஹாபாக்களில் சிலரை என்னுடன் எனது சமுதாயத்தின் பக்கம் அனுப்பி வையுங்கள். இவ்வாறு செய்தால் அவர்கள் உங்களின் அழைப்பை ஒப்புக் கொள்வார்கள் என நான் நம்புகின்றேன் என்றும் கூறினான். அதற்கு நஜது வாசிகள் சஹாபாக்களுக்கு ஏதாவது பாதிப்பை ஏற்படுத்தி விடுவார்களோ என நான் அஞ்சுகின்றேன் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். அதற்கு எவராவது அவர்களுக்கு முன்னால் வந்தால் நான் சஹாபாக்களுக்கு அடைக்கலம் வழங்குவேன் என்று அவன் கூறினான்.

எனவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் திருக்குர்ஆனை நன்கு ஓதக்கூடிய 70 காரிகளை அவனுடன் அனுப்பி வைத்தார்கள். ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ரு அஸ்சாஇதி அவர்களை அவர்களுக்கு அமீராக நியமித்தார்கள். இதற்கு முன்பும் இந்த சம்பவம் கூறப்பட்டுள்ளது.

இந்த மக்கள் பிஃரே மவூனா என்ற இடத்தை அடைந்தார்கள். அது பனீ சுலைமுடைய வசிப்பிடமாக இருந்தது. மேலும் அந்த இடம் ஆமிர் மற்றும் பனீ சலைம் ஆகிய கோத்திரங்களின் நிலங்களுக்கு மத்தியில் அமைந்திருந்தது. இந்த மக்கள் அங்கேயே தங்கினார்கள். மேலும் தமது ஒட்டகங்களை அங்கு மேய விட்டார்கள். அவர்கள் முதலில் ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹான் அவர்களை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடைய தூதுச் செய்தியை கொடுத்து ஆமிர் பின் துஃபைலிடம் அனுப்பினார்கள். அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியைப் படிக்கக்கூட இல்லை.

ஹஸ்ரத் ஹராம் பின் மில்ஹானின் மீது தாக்குதல் நடத்தி ஷஹீதாக்கி விட்டான். அதன் பிறகு முஸ்லீம்களுக்கு எதிராக பனூ ஆமிர் கோத்திரத்தை அழைத்தான். ஆனால் அவர்கள் அந்த விஷயத்தை ஏற்க மறுத்து விட்டார்கள். அடுத்து அவன் சுலைம், அஸிய்யா மற்றும் ஸக்வான் மற்றும் ரஹல் கோத்திரங்களை அழைத்தான். அந்த மக்கள் அவனுடன் கிளம்பி விட்டார்கள். மேலும் அவனைத் தமது தலைவனாகவும் ஆக்கிக் கொண்டார்கள்.

ஹஸ்ரத் ஹராம் அவர்கள் வருவதற்கு நேரமானபோது முஸ்லீம்கள் அன்னாரின் பின்னால் சென்றார்கள். சிறிது தூரம் சென்ற பிறகு அவர்கள் தாக்குதல் தொடுப்பதற்காக வந்து கொண்டிருந்த ஒரு குழுவை எதிர்கொண்டார்கள். அவர்கள் முஸ்லீம்களை சுற்றி வளைத்தார்கள். எதிரிகள் எண்ணிக்கையில் மிக அதிகமாக இருந்தனர். போரும் நடைபெற்றது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபாக்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள். முஸ்லீம்களில் ஹஸ்ரத் சுலைம் பின் மில்ஹான் மற்றும் ஹகம் பின் கைஸான் ஆகியோர் சுற்றி வளைக்கப்பட்டபோது அவர்கள் கூறினர்:

அல்லாஹ்வே எங்களுக்கு உன்னைத்தவிர யாரும் இல்லை. எங்களது சலாத்தை நீ உனது தூதருக்கு எட்ட வைத்து விடுவாயாக. ஏனென்றால் நீதான் எங்களுக்கு இஸ்லாத்தை வந்தடையச் செய்தாய். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு ஜிப்ரீல் (அலை) அவர்கள் தகவல் கொடுத்தார்கள். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: வ அலைஹிமுஸ் ஸலாம் அதாவது அவர்களின் மீது சாந்தி உண்டாவதாக.

முன்ஸிர் பின் அம்ர் அந்த மக்களிடத்தில் கூறினார்: நாங்கள் உமக்கு அமைதி நல்க வேண்டும் என்று நீங்கள் விரும்பினால் நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பு தந்து விடுவோம். ஆனால் அவர்கள் மறுத்து விட்டனர். அவர்கள் ஹஸ்ரத் ஹராமின் ஷஹாதத்திற்குரிய இடத்திற்கு வந்தார்கள். மேலும் அவர்களுக்கெதிராகப் போர் தொடுத்தார்கள். எந்த அளவுக்கு என்றால் சஹாபாக்கள் ஷஹீதாக்கப்பட்டார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்: அவர்கள் மரணிக்க வேண்டும் என்பதற்காகப் போரிட்டார்கள். மேலும் முன்னேறினார்கள். அதாவது மரணத்தைத் துணிவுடன் எதிர்கொண்டார்கள். ஆயினும் அவர்கள் அதனை நன்கு அறிந்திருந்தார்கள். மிக தைரியத்துடன் எதிரிகளை எதிர்கொண்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 39,40 முன்ஸிர் பின் அம்ர் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எதிரி போர் தளவாளங்களுடன் வந்திருந்தான். ஆனால் சஹாபாக்கள் போருக்கான எந்த ஆயத்தமும் இல்லாமல் எதிரிகளை எதிர்கொண்டார்கள். போருக்கான எண்ணமே அவர்களிடத்தில் இல்லாமல் இருந்தது.

அடுத்து ஒரு குறிப்பு வருகின்றது. ஹஸ்ரத் சுலைம் பின் கைஸ் அன்ஸாரி ஆவார். அன்னாரின் தாயாரின் பெயர் உம்மே சுலைம் பின்த் காலித் ஆகும். ஹஸ்ரத் கவ்லா பின்த் கைஸ் அவர்களின் சகோதரர் ஆவார். ஹஸ்ரத் கவ்லி பின்த் கைஸ் ஹஸ்ரத் ஹம்ஸா அவர்களின் மனைவி ஆவார். அன்னார் பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து யுத்தங்களில் பங்கு பெற்றார்கள். ஹஸ்ரத் உஸ்மான் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் அன்னாரது மரணம் நிகழ்ந்தது.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 545,546 சுலைம் பின் கைஸ் அன்ஸாரி (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 372 சுலைம் பின் கைஸ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் சாபித் பின் சஃலபா ஆவார். அன்னாரின் மற்றொரு பெயர் ஹஸ்ரத் சாபித் பின் சஃலபாவாக இருந்தது. அன்னாரின் தாயாரின் பெயர் உம்மே உனாஸ் பின்த் சஅது ஆகும். அவர்களின் தொடர்பு பனூ உஸ்ரா கோத்திரத்துடன் இருந்தது. அன்னாரின் தந்தை சஃலபா பின் ஸைது அவர்களை இப்னுல் ஜிதுஃ என்றும் கூறப்படுகிறது. இந்த பெயர் அன்னாரது வீர தீரம், உறுதிப்பாடு ஆகியவற்றின் காரணமாகக் கிடைத்தது. அன்னாரின் தந்தையார் சஃலபா பின் ஸைது அல்ஜஸா என அழைத்து வந்தார்கள். அன்னாருக்கு இந்த பெயர் அன்னாரின் வீரம் மற்றும் உறுதிப்பாடு மற்றும் தைரியம் ஆகியவற்றின் காரணமாக ஏற்பட்டிருந்தது.

இந்த அடிப்படையில்தான் ஹஸ்ரத் சாபித் அவர்கள் அல்ஜஸா என்றும் அழைக்கப்படுகின்றார்கள். ஹஸ்ரத் சாபித் பின் சஃலபா அவர்களின் பிள்ளைகளில் அப்துல்லாஹ் மற்றும் ஹாரிஸ் ஆகியோர் அடங்குவர். பத்ர், உஹது மற்றும் அகழ் போர் மற்றும் ஹுதைபிய்யா உடன்படிக்கை மற்றும் மக்கா வெற்றி போன்ற முக்கிய தருணங்களில் அன்னார் யுத்தத்தில் பங்கு பெற்றுள்ளார்கள். அன்னார் தாயிஃபிற்கு

எதிராகப் போர் நடைபெற்றபோது மரணமடைந்து விட்டார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 428,429 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து இன்னொரு சஹாபி அவரது பெயர் ஹஸ்ரத் சிமாக் பின் சஅது ஆகும். சஅது பின் சஃலபா அன்னாரின் தந்தையாவார்கள். ஹஸ்ரத் நுஃமான் பின் பஷீரின் தந்தையாரும், ஹஸ்ரத் பஷீர் பின் சஅது அவர்களும் சகோதரர் ஆவார்கள். பத்ர் யுத்தத்தில் தனது சகோதரரான ஹஸ்ரத் பஷீர் அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றார்கள். உஹது போரிலும் பங்கு பெற்றிருந்தார்கள். அன்னார் ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 552 சிமாக் பின் சஅது (ரலி) – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த ஒரு சஹாபி அவரது பெயர் ஜாபிர் பின் அப்தில்லாஹ் பின் ரியாப் ஆகும். ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் துவக்க காலத்தில் பைஅத் செய்த ஆறு நபர்களில் ஒருவராக இருந்தார்கள். ஹஸ்ரத் ஜாபிர் அவர்கள் அந்த ஆறு நபர்களில் ஒருவராக கருதப்பட்டார்கள். அந்தக் குழுவானது எல்லோரையும் விட முதலில் இஸ்லாத்தை ஏற்றுக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் ஜாபிர் பதர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றிருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 431 ஜாபின் பின் அப்தில்லாஹ் (ரலி) – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

பைஅத்தே உக்பாவிற்கு முன்பாக அன்ஸார்களில் சில மக்கள் இறைத்தூதர் (ஸல்) அவர்களை மக்காவில் சந்தித்தனர். அவர்களின் எண்ணிக்கை ஆறு ஆகும். அந்த சஹாபாக்களின் பெயர்கள் இவ்வாறாகும்:

1. அஸ்அது பின் ஸுராரா
2. அவ்ஃப் பின் ஹாரிஸ்
3. ராஃபி பின் மாலிக் பின் அஜ்லான்
4. குத்பா பின் ஆமிர் பின் ஹதீதா
5. உக்பா பின் ஆமிர் பின் நாபீ
6. ஜாபிர் பின் அப்தில்லாஹ் பின் ரியாப்

இவர்கள் அனைவரும் முஸ்லீம்கள் ஆயினர். இம்மக்கள் மதீனாவிற்குத் திரும்பியதும் மதீனா வாசிகளிடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைப் பற்றி கூறினர்.

(அஸதுல் காபா தொகுதி 1 பக்கம் 492 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இதைப் பற்றிய விரிவான குறிப்பு உக்பா பின் ஆமிர் பின் நாபீ என்ற சஹாபியின் குறிப்பில் முன்னர் கூறப்பட்டு விட்டது. சுருக்கமாக இங்கு கூறு விடுகின்றேன்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்தித்து விட்டு இந்த மக்கள் புறப்படும்போது கூறினர்: போர்கள் எங்களை மிகவும் பலஹீனப்படுத்தி விட்டன. எங்களுக்கிடையில் ஏராளமான மன மாச்சரியங்கள் உள்ளன. நாங்கள் இப்போது மதீனா திரும்பிச் சென்று எங்களது சகோதரர்களுக்கு இஸ்லாத்தைப் பற்றித் தப்லீக் செய்வோம். உங்களது தூதுச் செய்தியின் மூலமாகவும் மேலும் எங்களின் தப்லீக்கின் மூலமாகவும் அல்லாஹ் எங்களை மீண்டும் ஒன்றுகூட்டி விடுவது சாத்தியமற்ற ஒன்றல்ல. மீண்டும் நாங்கள் ஒன்றுபட்டு விடுவோம் என்றால் நாங்கள் எல்லா வகையிலும் உங்களுக்கு உதவி செய்ய ஆயத்தமாக இருப்போம்.

ஆக இம்மக்கள் சென்றனர். அவர்களின் காரணமாக மதீனாவில் இஸ்லாத்தைப் பற்றிய பேச்சுக்கள் நடைபெற்றன. இந்த வருடம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்கா மற்றும் மதீனா வாசிகளின் வெளிப்படையான சூழல் மற்றும் காரணிகளின் அடிப்படையில் அந்த வருடத்தை அச்சம் மற்றும் நம்பிக்கையின் நிலைகளில் கழித்தார்கள். ஆறு நம்பிக்கையாளர்கள் சென்றிருக்கின்றார்கள். அவர்கள் பைஅத்தும் செய்திருக்கின்றார்கள். அவர்களின் முடிவு என்னவாக அமைகின்றது. அல்லது மதீனாவில் ஏதாவது வெற்றி கிடைக்கின்றதா? இல்லையா? என்பது தொடர்பான நம்பிக்கையும் இருந்தது.

ஏனென்றால் மற்ற இடங்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மிகக் கடுமையாக மக்கள் நிரகாரித்திருந்தனர். இன்னும் சொல்லப்போனால் எதிர்ப்பு அதன் உச்சத்தை அடைந்திருந்தது. மக்கா மற்றும் தாயிஃப் நகரத்துத் தலைவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை மிகக் கடுமையாக நிராகரித்திருந்தனர். ஏனைய கோத்திரங்களும் அதன் தாக்கத்திற்காளாகி ஒன்றன் பின் ஒன்றாக நிராகரித்திருந்தன.

எனவே இந்த சூழலில் ஆறு நபர்களின் பைஅத்தின் காரணமாக மதீனாவில் நம்பிக்கையின் ஒரு ஒளிக் கதிர் வெளிப்பட்டு இருந்தது. ஆனால் அதுவும் கூட ஆறுதல் அளிப்பதாக இருக்கவில்லை. ஏனென்றால் ஏற்றுக் கொண்ட ஆறு நபர்களும் துன்பங்கள் மற்றும் கஷ்டங்களை எதிர்கொள்வார்களா என்பதை யாரால் கூற முடியும். அவர்களுக்கு எதிராகவும் எதிரிகள் எழுந்து நின்றால் அவர்கள் என்ன செய்வார்கள்? என்ற கேள்வி எஞ்சியிருந்தது.

எவ்வாறிருப்பினும் இந்த மக்கள் சென்றார்கள். அவர்கள் தப்லீக்கும் செய்தார்கள். ஆனால் இதற்கிடையில் மக்கா வாசிகள் புறமிருந்தும் பகைமையும், எதிர்ப்பும் நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே சென்றது. மேலும் அந்த மக்கள் இஸ்லாத்தை அழிப்பதற்கு இதுவே உகந்த நேரம் என்பதை உறுதியாக நம்பிக் கொண்டிருந்தனர். ஏனென்றால் மக்காவை விட்டு வெளியேறத் தொடங்கி விட்டால் இஸ்லாம் பரவி விட்டால் பின்னர் அதனை அழிப்பது கடினமாக அமைந்து விடும்.

எனவே இஸ்லாத்தை அழிப்பதற்கு மக்கத்து வாசிகள் எதிர்ப்பில் தமது முழுமையான அழுத்தத்தைக் கொடுத்து வந்தனர். ஆனால் அதன் பின்னரும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும், அவர்களிடம் பைஅத் செய்திருந்த அவர்களின் பற்றுமிக்கமிக்க சஹாபாக்களும் ஒரு உறுதிமிக்க பாறையைப் போன்று தமது கூற்றில் நிலை நின்றனர். எந்தவொரு விஷயமும் அவர்களை இஸ்லாத்தின் போதனைகளிலிருந்தும், இஸ்லாத்திலிருந்தும் அசைக்க முடியாமல் போனது. ஏகத்துவத்திலிருந்து அவர்களை விலக்க முடியவில்லை.

எவ்வாறிருப்பினும் அந்த நேரம் இஸ்லாத்திற்கு மிகவும் ஆபத்தான நேரமாக இருந்தது. நம்பிக்கையும் இருந்தது. அச்சமும் இருந்தது. அந்த மக்கள் மதீனாவுக்குத் திரும்பிச் சென்றிருந்தனர். அதன் விளைவு என்னவாக இருக்கும் என்பதைப் பார்க்க ஆவல் அதிகமாக இருந்தது. பின்னர் அடுத்த வருடம் மதீனாவிலிருந்து ஒரு குழு ஹஜ் செய்வதற்காக மக்காவிற்கு வந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிக ஆர்வமுடன் தமது வீட்டிலிருந்து வெளியேறினார்கள். மினாவின் பக்கம் உக்பாவைச் சென்றடைந்து இங்கும் அங்கும் பார்த்தார்கள். அப்போது திடீரென அன்னாரது பார்வை மதீனாவிலிருந்து வந்திருந்த ஒரு சிறிய ஜமாஅத்தின் மீது

பட்டது. அவர்களும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைக் கண்ட உடன் உடனடியாக அடையாளங்கண்டு கொண்டனர். அந்த குழுவினர் மிகவும் நேசத்துடனும் கலப்பற்ற தன்மையுடனும் முன்னேறிச் சென்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்தித்தனர். அவர்களில் ஐந்து நபர்கள் ஏற்கனவே பைஅத் செய்து சென்றவர்கள் ஆவர். ஏழு நபர்கள் புதியவர்களாக இருந்தனர். ஹஸ்ரஜ் மற்றும் அவ்ஸ் கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இந்த மக்கள் இருந்தனர்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களை விட்டு அவர்களை விலக்கிச் சென்று ஓரிடத்தில் அவர்களை சந்தித்தார்கள். மதீனாவிலிருந்து வந்திருந்த 12 நபர்களைக் கொண்ட அந்த குழுவினர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மதீனாவின் நிலைகளைப் பற்றி தகவல் தந்தனர். அவர்கள் அனைவரும் முறையாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கரங்களில் பைஅத் செய்தனர். மதீனாவில் இஸ்லாத்தை நிலைநாட்டுவதற்காக அடிக்கல்லாக இந்த பைஅத்துதான் அமைந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களிடமிருந்து பின்வரும் விஷயங்களில் பைஅத் வாங்கினார்கள்.

அதாவது நாங்கள் இறைவன் ஏகன் என்று நம்புவோம். அவனுக்கு இணை வைக்க மாட்டோம். மேலும் திருட மாட்டோம். விபச்சாரம் செய்ய மாட்டோம். கொலை செய்வதிலிருந்து விலகி இருப்போம். எவர் மீதும் பழி சுமத்த மாட்டோம். எல்லா நல்ல காரியங்களில் உங்களுக்குக் கட்டுப்பட்டு நடப்போம் ஆகிய விஷயங்களில் அவர்கள் பைஅத் செய்திருந்தனர்.

பைஅத்திற்குப் பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அம்மக்களிடம் கூறினார்கள்: பாருங்கள்! நீங்கள் உண்மையுடனும், உறுதிப்பாட்டுடனும் இந்த பைஅத் உடன்படிக்கையில் நிலைத்து நின்றால் உங்களுக்கு சுவர்க்கம் கிடைக்கும். ஒருவேளை நீங்கள் பலவீனத்தை வெளிப்படுத்தினால் அந்நிலையில் உங்களின் விவகாரம் இறைவனிடம் உள்ளது. அவன் எவ்வாறு விரும்புவானோ அவ்வாறு அவ்விவகாரங்களில் உங்களுடன் நடந்து கொள்வான்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 222–224)

எவ்வாறிருப்பினும் அந்த மக்கள் தமது பைஅத் உடன்படிக்கையில் உறுதிப்பாட்டை வெளிப்படுத்தினார்கள். உறுதிப்பாட்டை மட்டும் அவர்கள் வெளிப்படுத்தவில்லை. மாறாக, அதனை உயர்ந்த தரம் வரை எட்டச் செய்து விட்டனர். மதீனாவில் இஸ்லாம் எவ்வாறெல்லாம் பரவியது என்பது அதற்குப் பிறகுள்ள சூழல்களிலிருந்து நமக்குத் தெரிய வருகிறது.

ஹஸ்ரத் முன்ஸர் பின் அம்ர் பின் ஹுனைஸ் ஒரு சஹாபி ஆவார். அவரைப் பற்றியும் இங்கு கூறப்படும். மஅனிகு லீ யமூது அல்லது மஅனிகு லில் மவ்த் என்பது அன்னாரது பட்டப் பெயராகும். அதாவது மரணத்தை தானாக முன் சென்று முத்தமிடக் கூடியவர் என்பது அதன் பொருளாகும். இவரின் பெயர் முன்ஸிர். அவரின் தந்தையின் பெயர் அம்ர் ஆகும். அன்ஸாரர்களின் கோத்திரமான ஹஸ்ரஜ் கோத்திரத்தின் பனூ சாயிதாவைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். பைஅத்தே உக்பாவில் பங்கு பெற்றிருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் அவர்களையும், ஹஸ்ரத் சஅது பின் உபாதா அவர்களையும் அவர்களின் கோத்திரமான பனூ சாயிதாவின் கண்காணிப்பாளர்களாக நியமித்தார்கள். அறிவீனமான காலகட்டத்தில் கூட ஹஸ்ரத் முன்ஸிர் அவர்கள் எழுதப்படிக்க அறிந்திருந்தார்கள்.

மதீனாவிற்கு ஹிஜ்ரத் செய்த பிறகு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் முன்ஸிர் மற்றும் ஹஸ்ரத் துலைப் பின் உமைர் அவர்களுக்கிடையில் சகோதரத்துவ பந்தத்தை ஏற்படுத்தினார்கள். அன்னார் அதாவது ஹஸ்ரத் முன்ஸிர் அவர்கள் பத்ர் போர் மற்றும் உஹது போரில் பங்கு பெற்றார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 232)

ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் அவர்களைப் பற்றி சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலில் ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் இவ்வாறு எழுதியுள்ளார்கள்:

ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்த பனூ சாயிதா குடும்பத்தைச் சேர்ந்தவராக அன்னார் இருந்தார்கள். ஒரு சூஃபி இயல்புடைய மனிதராக அன்னார் இருந்தார்கள். பிஃரே மவூனா சம்பவத்தில் அன்னார் ஷஹீதானார்கள்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 232)

பிஃரே மவூனாவின் விளக்கம் முந்தைய சஹாபாக்களின் குறிப்புகளில் வந்து விட்டது. அதில் ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் அவர்களுடன் தொடர்புடைய சில பகுதியை இங்கு குறிப்பிடுகின்றேன்.

சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூலிலிருந்து சுருக்கமாக அது எடுக்கப்பட்டுள்ளது. சுலைம் மற்றும் அத்ஃபான் என்ற இந்த கோத்திரங்கள் மத்திய அரபில் நஜது என்ற இடத்தில் வசித்து வந்தனர். முஸலீம்களுக்கு எதிராக மக்கத்து குரைஷிகளுடன் அந்த கோத்திரங்கள் தொடர்பு வைத்திருந்தன. அவர்களுக்கிடையில் நெருங்கிய தொடர்பு இருந்தது. இஸ்லாத்தை எவ்வாறு அழிப்பது என்பதில் அவர்களுக்கும் மக்கத்து குரைஷிகளுக்கும் தொடர்பு இருந்து வந்தது. பின்னர் கொஞ்சம் கொஞ்சமாகத் தீங்கிழைக்கக்கூடிய கோத்திரங்களில் தீங்குகள் அதிகரித்துக் கொண்டே சென்றன. நஜது என்ற அந்த பகுதி முழுவதும் இஸ்லாத்திற்கெதிரான பகைமை எனும் விஷத்தின் பிடியில் வந்து கொண்டே சென்றன. அதன் தாக்கம் ஏற்பட்டுக் கொண்டே சென்றது.

எனவே அந்நாட்களில் அபூ பரா ஆமிர் என்ற ஒரு நபர் அவர் பனூ ஆமிர் என்ற மத்திய அரபின் பகுதியைச் சார்ந்த கோத்திரத்தின் தலைவனாக இருந்தான். அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களைச் சந்திப்பதற்காக வந்தான். ஏற்கனவே இது பற்றி கூறப்பட்டு விட்டது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மிகவும் மென்மையாக அவனுக்கு இஸ்லாத்திற்கு அழைப்பு கொடுத்தார்கள். இஸ்லாத்தைத் தப்லீக் செய்தார்கள். அவனும் வெளிப்படையில் தப்லீக்கை ஆர்வமுடன் செவியுற்றான்.

ஆனால் முஸ்லீமாகவில்லை. பின்னர் ஏற்கனவே கூறப்பட்டது போன்று அவன் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடம், என்னுடன் உங்களது சில சஹாபாக்களை நஜது பகுதிக்கு அனுப்பி வையுங்கள். அவர்கள் அங்கு சென்று நஜது வாசிகளுக்கு தப்லீக் செய்யட்டும் என்று கூறினான். நஜது வாசிகள் உங்களின் அழைப்பை மறுக்க மாட்டார்கள் என்றும் அவன் கூறினான். ஆனால் எனக்கு நஜது வாசிகள் மீது நம்பிக்கை இல்லை என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

அதற்கு நீங்கள் ஒருபோதும் கவலைப்படாதீர்கள். என்னுடன் வருகின்ற அவர்களின் பாதுகாப்பிற்கு நான் பொறுப்பாளியாவேன் என்றும் கூறினான். ஒரு கோத்திரத்தின் தலைவனாகவும், செல்வாக்குமிக்க நபராகவும் அபூ பர்ரா இருந்ததாலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவன் கூறிய வார்த்தைகளை

நம்பினார்கள். சஹாபாக்களின் ஒரு கூட்டத்தை நஜது பகுதிக்கு அனுப்பி வைத்தார்கள்.

ஹஸ்ரத் மியான் பஷீர் அஹ்மது சாஹிப் அவர்கள் எழுதுகின்றார்கள்: இது வரலாற்று அறிவிப்பாகும். ஆனால் புகாரியில் வருகின்ற அறிவிப்பு என்னவென்றால், ரஹல் மற்றும் ஸக்வான் போன்ற பிரபலமான கோத்திரங்கள் பனூ சுலைம் என்ற கோத்திரத்தின் கிளைகளாக இருந்தன. அவர்களில் சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். இஸ்லாத்திற்கு ஆதரவான நிலையை வெளிப்படுத்தியவாறு வேண்டினார்கள். எங்களது சமுதாயத்தில் உங்களுக்கு இஸ்லாத்தின் எதிரிகளுக்கு எதிராக நீங்கள் எங்களுக்கு உதவி செய்யுங்கள். இதில் எப்படிப்பட்ட உதவி என்பது தெளிவாக இல்லை. படைபல உதவியா? அல்லது வேறு வகையானதா? என்பது தெளிவாக இல்லை.

எவ்வாறிருப்பினும் அவர்கள் சில நபர்களை அதற்காக அனுப்பி வைக்குமாறு வேண்டினர். அதன் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஒரு குழு ஒன்றை ஏற்கனவே கூறப்பட்டது போன்று அனுப்பி வைத்தார்கள். துரதிர்ஷ்டவசமாக பிஃரே மவூனாவின் சம்பவத்தின் விளக்கங்களிலும், புகாரியின் அறிவிப்புகளிலும் சில மாறுபட்ட தகவல்கள் இருப்பதாக தோன்றுகின்றது. இரண்டு அறிவிப்புகளை இரண்டு சம்பவங்களில் ஒன்று சேர்க்கப்பட்டு விட்டன. எனவே வரலாற்றிலிருந்தும், புகாரியின் அறிவிப்புகளிலிருந்தும் உண்மை என்ன என்பது தெரிவதில்லை. ஆனால் எவ்வாறிருப்பினும், அவர்கள் ஒரு தீர்வை வெளிப்படுத்தினார்கள்.

அவர்கள் கூறினார்கள்: இதன் காரணமாக முழுமையான உண்மை தெளிவாக வெளிப்படவில்லை. எவ்வாறிருப்பினும், இந்த அளவிற்கு உறுதியாக தெரிகின்றது. இந்த சந்தர்ப்பத்தில் ரஹல் மற்றும் ஸக்வான் கோத்திரத்தைச் சார்ந்த சிலர் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் வந்தார்கள். மேலும் சில சஹாபாக்களை அவர்களுடன் அனுப்பி வைக்குமாறு வேண்டினார்கள். இந்த இரண்டு அறிவிப்புகளிலும் ஒருமித்த கருத்தை இவ்வாறு உருவாக்கலாம்.

அன்னார் எழுதியுள்ளார்கள்: இந்த இரண்டு அறிவிப்புகளும் வேறுபட்டதென்றால் மேலும் அவற்றிற்கிடையில் ஒருமித்த கருத்தை ஏற்படுத்த வேண்டும். இந்த இரண்டு அறிவிப்புகளுக்கும் இடையில் என்ன தொடர்பு மற்றும் எவ்வாறு அதனை நாம் ஒப்புமைபடுத்தி பார்க்கலாம் என்று அன்னார் கூறுகின்றார்கள்: ரஹல் மற்றும் ஸக்வான் மக்களுடன் அபூ பரா ஆமிர் என்ற ஆமிர் கோத்திரத்தின் தலைவனும் வந்திருந்தான். அவன் கோத்திரத்தின் மக்கள் சார்பாக ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் பேசியிருக்கலாம்.

எனவே வரலாற்றின் அறிவிப்பிற்கேற்ப ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவனிடத்தில் எனக்கு நஜது வாசிகள் மீது நம்பிக்கை இல்லை என்று கூறியதும் அதற்கு அவன் நீங்கள் கவலைப்படாதீர்கள். உங்களது தோழர்களுக்கு எந்தத் துன்பமும் ஏற்படாது. நான் அதற்கான உத்திரவாதத்தைத் தருகிறேன் என்று பதிலளித்ததும் அபூ பர்ராவுடன் ரஹல் மற்றும் ஸக்வான் கோத்திரத்தைச் சார்ந்த மக்களும் வந்திருந்தனர் என்பதை சுட்டிக் காட்டுகின்றது. அதன் காரணமாகவே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களும் கவலை கொண்டார்கள்.

எவ்வாறிருப்பினும் ஹிஜ்ரி நான்காம் ஆண்டு சஃபர் மாதத்தில் முன்ஸிர் பின் அம்ர் அன்ஸாரி என்ற சஹாபியின் தலைமையில் சஹாபாக்களின் குழு ஒன்று புறப்பட்டது. இந்த மக்கள் பொதுவாக அன்ஸார்களாக இருந்தார்கள். அவர்களின் எண்ணிக்கை 70 ஆக இருந்தது. ஏறக்குறைய அவர்கள் அனைவரும் காரியாகவும் திருக்குர்ஆனை மனனம் செய்தவர்களாகவும் இருந்தனர். அந்த மக்கள் ஒரு கிணற்றின காரணமாக பேரே மஊனா என்ற பெயரால் மிகவும் பிரபல்யமாகி இருந்த அந்த இடத்தை அடைந்தார்கள். அவர்களில் ஹராம் பின் மில்ஹான் என்ற அனஸ் பின் மாலிக் அவர்களின் மாமா அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதுச் செய்தியை எடுத்துக் கொண்டு ஆமிர் சமுதாயத்தின் தலைவர் மற்றும் அபூ பரா ஆமிரி அவரிடத்தில் சென்றார்கள். அவரைப் பற்றி ஏற்கனவே கூறப்பட்டு விட்டது.

மற்ற சஹாபாக்கள் பின்தங்கி இருந்தனர். ஹராம் பின் மில்ஹான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதராக ஆமிர் பின் துஃபைல் மற்றும் அவனுடைய நண்பர்களிடத்தில் சென்றடைந்தார்கள். முதலில் அவர்கள் நயவஞ்சகத்தனமாக வரவேற்றுப் பேசினார்கள். ஆனால் அன்னார் அமைதியடைந்து அமர்ந்து இஸ்லாத்தை தப்லீக் செய்து கொண்டிருந்தபோது ஏற்கனவே கூறப்பட்டிருப்பது போன்று சில கயவர்கள் ஒருவருக்கு சைகை செய்தனர். அவன் பின்புறமாக இருந்து வாளால் தாக்குதல் நடத்தி அன்னாரை ஷஹீதாக்கி விட்டான். அந்நேரத்தில் ஹராம் பின் மில்ஹான் அவர்களின் நாவிலிருந்து அல்லாஹு அக்பர் புஸ்து வ ரப்பில் கஃபா அதாவது அல்லாஹு அக்பர். கஃபாவின் இறைவன் மீது ஆணையாக! நான் எனது இலட்சியத்தை அடைந்து விட்டேன் என்று கூறினார்கள்.

அம்ர் பின் துஃபைல் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் தூதரைக் கொலை செய்ததோடு திருப்தியடைந்து விடவில்லை. மாறாக, அதன் பிறகு தனது பனூ ஆமிர் கோத்திரத்தின் மக்களை முஸ்லீம்களின் எஞ்சிய கோத்திரத்தின் மீது தாக்குதல் தொடுப்பதற்குத் தூண்டி விட்டான். ஆனால் ஏற்கனவே கூறப்பட்டது போன்று அந்த மக்கள் நிராகரித்து விட்டனர். ஆனால் அங்கு நடந்த ஒரு கூடுதல் விஷயம் என்னவென்றால், இந்த மக்கள் நாங்கள் அபூ பர்ரா பொறுப்பேற்றிருக்கின்ற நிலையில் நாங்கள் முஸ்லீம்கள் மீது தாக்குதல் நடத்த மாட்டோம் என்று கூறி விட்டனர். ஏனென்றால், நான் அவர்களுக்குப் பொறுப்பாளி ஆவேன் என்று அபூ பர்ரா ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கூறியிருந்தான்.

எனவே அவர் இவ்வாறு பொறுப்பேற்று இருக்கின்றபோது நாங்கள் அவர்கள் மீது தாக்குதல் நடத்த மாட்டோம் என்று அந்த கோத்திரத்தார் கூறி விட்டனர். அப்போது ஆமிர் இரண்டாவது கோத்திரமான சலீம் என்ற கோத்திரத்தில் ரஹல் மற்றும் ஸக்வான் மற்றும் ஹுஸைய்யா போன்ற புகாரியின் அறிவிப்பின் அடிப்படையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் குழுவாக சென்றிருந்த கோத்திரங்களைத் தன்னுடன் சேர்த்துக் கொண்டான்.

அந்த அனைத்து மக்களும் முஸ்லீம்களின் அந்தச் சிறிய மற்றும் நிராயுதபாணியாக இருந்த கூட்டத்தின் மீது தாக்குதல் நடத்தினர். இந்த காட்டுமிராண்டிகள் தன் பக்கம் வருவதைப் பார்த்த முஸ்லீம்கள் உங்களுடன் எங்களுக்கு எந்தப் பிரச்சனையும் இல்லை. நாங்கள் போரிடுவதற்காக இங்கு வரவில்லை. நாங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சார்பாக முக்கிய பணி காரணமாக வந்திருக்கின்றோம். எங்களுக்கு உங்களுடன் சண்டையிடுவதற்கு எந்த எண்ணமும் இல்லை என்று கூறினர். ஆனால் அவர்கள் எதனையும் கேட்கவில்லை. மாறாக, முஸ்லீம்கள் அனைவரையும் ஷஹீதாக்கினர்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 222–517–519)

வரலாற்றில் வருகிறது: ஜிப்ரீல் (அலை) அவர்கள் பிஃரே மவூனா ஷுஹதாக்கள் தொடர்பாகத் தகவல் கொடுத்தபோது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் முன்ஸிர் பின் அம்ர் அவர்களிடத்தில்

கூறினார்கள். அவர்களைப் பற்றியே தற்போது கூறப்பட்டு வருகின்றது. அந்த சஹாபி ஆனிகு லி யமூத் ஆவார்கள். அதாவது ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் அவர்கள் இப்போது தமக்கு ஷஹாதத் விதிக்கப்பட்டுள்ளது என்பதை நன்கு அறிந்த பிறகும் தமது நண்பர்களைப் போன்று அதே இடத்தில் போரிட்டு ஷஹாதத்தை ஏற்றுக் கொண்டார்கள். இதன் காரணமாக அன்னார் முஇனுகு லி யமூத் அல்லது முஇனுகு லில் மவ்த் என்ற பட்டத்தால் அவர்கள் பிரபல்யமடைந்திருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 258 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 2 பக்கம் 40 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் முன்ஸிர் பின் அம்ர் அவர்களிடத்தில் அந்த மக்கள் கூறினார்கள்: நீங்கள் விரும்பினால் நாங்கள் உங்களுக்குப் பாதுகாப்பு வழங்கி விடுவோம். ஆனால் ஹஸ்ரத் முன்ஸிர் அவர்களின் அடைக்கலத்தை நிராகரித்து விட்டார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 258,259 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சஹல் (ரலி) அவர்கள் அறிவிக்கின்றார்கள்: ஹஸ்ரத் அபூ உஸைர் அவர்களிடத்தில் அவர்களின் மகன் முன்ஸிர் பின் அபீ உஸைர் பிறந்தார்கள். அப்போது அவரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் கொண்டு வந்தனர். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அக்குழந்தையைத் தமது மடியில் அமர வைத்தார்கள். அப்போது ஹஸ்ரத் அபூ உஸைது அவர்களும் அமர்ந்திருந்தார்கள். இதற்கிடையில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் வேறொரு பணியில் மும்முரமானார்கள். ஹஸ்ரத் அபூ உஸைது முன்ஸிரை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் மடியிலிருந்து எடுத்துச் செல்லும்படி மக்களிடம் சைகை செய்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தனது பணியை முடித்த பிறகு குழந்தை எங்கே? என்று கேட்டார்கள்.

ஹஸ்ரத் அபூ உஸைது அவர்கள் நாங்கள் அவரை வீட்டிற்கு அனுப்பி வைத்து விட்டோம் என்று கூறினார். அப்போது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அந்தக் குழந்தைக்கு என்ன பெயர் வைத்துள்ளீர்கள் என்று வினவினார்கள். அதற்கு அபூ உஸைது அவர்கள் இன்ன பெயரை வைத்துள்ளோம் என்று கூறினார்கள். அதற்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த பெயர் வேண்டாம். அவர் பெயர் முன்ஸிர் ஆகும் என்று கூறினார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், அந்த குழந்தைக்கு முன்ஸிர் என்று பெயர் வைத்தார்கள்.

எந்த முன்ஸிரைப் பற்றி நாம் கூறிக் கொண்டிருக்கின்றோமோ அவர் இந்த குழந்தை அல்ல. வரலாற்றின் விரிவுரையாளர்கள் அந்த குழந்தைக்கு முன்ஸிர் என ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பெயர் வைத்ததற்கு இந்த காரணத்தைக் கூறுகின்றனர். அதாவது ஹஸ்ரத் அபூ உஸைது அவர்களின் சிறிய தந்தையாரின் பெயர் முன்ஸிர் பின் அம்ர் ஆகும்.

அந்த சஹாபியைப் பற்றியே கூறப்படுகின்றது. அவர் பிஃரே மவூனா சம்பவத்தில் ஷஹீதாகி இருந்தார். மேலும் அன்னார் அபூ உஸைது அவர்களின் சிறிய தந்தையும் ஆவார். எனவே அந்த குழந்தைக்கு அவரின் நினைவாக அந்த பெயர் வைக்கப்பட்டது. மேலும் அந்த குழந்தை அவரின் பிரதிநிதியாக வெளிப்பட வேண்டும் என்பதற்காக அந்த பெயர் வைக்கப்பட்டது.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் அதப்... ஹதீஸ் எண் 6191 & ஃபதஹுல் பாரி ஷரஹ் சஹீஹுல் புகாரி கிதாபுல் மகாஸி தொகுதி 7 பக்கம் 452 – 1986 ஆம் ஆண்டு அச்சிடப்பட்டது)

மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் தமது அன்பர்களின் பெயர்களை உயிருடன் வைப்பதற்காக தமது நெருங்கிய நண்பர்களின் பெயர்களை அவர்களின் பெயர்களாக வைத்திருக்கலாம். நிச்சயமாக இதுவும் ஓர் காரணமாக இருக்கும்.

ஹஸ்ரத் மஃபத் பின் அப்பாத் ஒரு சஹாபி ஆவார். அவரின் பட்டப்பெயர் அபூ ஹுமைஸாக இருந்தது. அப்பாத் பின் குஷைர் அன்னாரின் தந்தையாவார்கள். ஹஸ்ரத் முஃபத் பின் அப்பாத் அவர்களின் பெயர் முஃபத் பின் உபாதா மற்றும் முஃபத் பின் உமாரா அவர்களும் கூறி இருக்கின்றார்கள். அவர்கள் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ சாலிம் பின் கனம் பின் அவ்ஃப் கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தனர். அபூ ஹுமைஸா என்பது அன்னாரது பட்டப்பெயராகும். வேறு சிலரைப் பொருத்தவரை அபூ ஹுமைஸா மற்றும் அபூ உஸைமா என்றும் வந்துள்ளது. பத்ர் மற்றும் உஹது போர்களில் அன்னார் பங்கு பெற்றிருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 5 பக்கம் 211,212 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 408,411 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஒரு சஹாபி ஹஸ்ரத் அதீ பின் அபீ ஸக்பா அன்ஸாரி ஆவார்கள். அன்னாரின் தந்தையார் பெயர் சினான் பின் சுபைஹ் ஆகும். அன்னார் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் மரணமடைந்தார்கள். ஹஸ்ரத் அதீ அவர்களின் தந்தையார் அபீ ஸக்பாவின் பெயரானது சனான் பின் சபீஹ் பின் சஃலபா என்ற பெயரால் பிரபல்யமடைந்திருந்தார்கள். அன்னார் ஜுஹீனா கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். பத்ர், உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 11 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 377 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை ஹஸ்ரத் பஸ்பஸ் பின் அம்ர் அவர்களுடன் தகவல் அறிந்து வருவதற்காக பத்ர் போர் சந்தர்ப்பத்தின்போது அபூ சுஃப்யானின் குழுவினரின் பக்கம் அனுப்பி வைத்தார்கள். அவர்கள் அது தொடர்பான செய்தியை அறிந்து வர சென்றிருந்தார்கள். எந்த அளவுக்கு என்றால் ஒரு கடற்கரை ஓரத்தை அவர்கள் சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் பஸ்பஸ், உமர் மற்றும் ஹஸ்ரத் அதீ பின் அபீ ஸக்பா அவர்கள் பத்ர் மைதானத்தின் ஓர் இடத்தில் தங்களது ஒட்டகங்களை நிறுத்தினர். அருகிலிருந்து நீர் நிலைக்கு சென்றனர். அங்கு சென்று தண்ணீர் கொண்டு வரத் திட்டமிட்டனர். ஒரு நபர் மஜ்தீ பின் அம்ர் ஜுஹ்னீ அந்த நீர்நிலைக்கு அருகில் நின்று கொண்டிருந்தார்கள். அந்த இரண்டு சஹாபிகளும் அந்த இரண்டு பெண்கள் பேசுவதைக் கேட்டனர்.

ஒரு பெண் மற்றொரு பெண்ணிடம், நாளை அல்லது நாளை மறுநாள் பயணக் குழு ஒன்று வரவுள்ளது. அவர்களுக்கு வேலை செய்து உனது கடனை நான் அடைத்து விடுகின்றேன் என்று கூறினாள். இப்போது இவர்கள் வெளிப்படையில் பேசிக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் அதில் தகவல் இருந்தது. மஜ்தீ என்பவர் நீங்கள் சரியாக கூறுகின்றீர்கள் என்று கூறினார். பின்னர் அவர் அந்த இரண்டு பெண்களை விட்டுக் கடந்து சென்று விட்டார். பின்னர் அங்கிருந்து விலகியும் சென்று விட்டார். ஹஸ்ரத் அதீ மற்றும் ஹஸ்ரத் பஸ்பஸ் அவர்கள் இந்த செய்தியைச் செவிமடுத்தனர். பின்னர் அவர்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குத்

தகவல் கொடுத்தார்கள்.

(கிதாபுல் மகாஸி தொகுதி 1 பக்கம் 40 பாப் பத்ருல் கிதால் – 1984 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

அதாவது நாங்கள் இன்ன இன்ன விஷயங்களைச் செவிமடுத்தோம். இரண்டு பெண்கள் இவ்வாறெல்லாம் பேசிக் கொண்டார்கள் என்று கூறினர். ஒரு பயணக்குழு வரவுள்ளது. இது நிராகரிப்பாளர்களின் குழுவைப் பற்றிய தகவலாக இருந்தது. இவ்வாறு தகவல்களை அம்மக்கள் சென்று சேர்த்தனர். வெளிப்படையில் பார்க்கின்றபோது இரண்டு பெண்கள் பேசிக் கொண்டிருந்தனர். ஆனால் அதன் முக்கியத்துவத்தைப் பற்றிய கணிப்பு சஹாபாக்களுக்கு இருந்தது. இது மிகவும் முக்கியமான செய்தியாக இருந்தது. பயணக்குழுவின் வருகை பற்றிய செய்தி கிடைத்துக் கொண்டிருந்தது. ஹஸ்ரத் அதீ பின் அபீ ஸக்பா அவர்கள் ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் வஃபாத்தானார்கள்.

(அல் அஸாபா தொகுதி 4 பக்கம் 391,392 – 1995 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஒரு சஹாபி ஹஸ்ரத் ரபீஃ பின் இயாஸ் ஆவார்கள். அவர்கள் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ லோஸான் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். பத்ர் யுத்தத்தில் தமது சகோதரரான வர்க்கா பின் இயாஸ் மற்றும் அம்ர் பின் இயாஸ் ஆகியோருடன் இணைந்து பங்கு பெற்றார்கள். உஹது யுத்தத்திலும் அன்னார் பங்கு பெற்றிருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 416,417 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & கிதாபுல் மகாஸி தொகுதி 1 பக்கம் 167 – 1984 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள ஆலிமுல் குதுபில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் ஹஸ்ரத் உமைர் பின் ஆமிர் அன்ஸாரி ஆகும். அவர்களின் பட்டப்பெயர் அபூ தாவூது ஆகும். அவர்களின் தந்தையின் பெயர் ஆமிர் பின் மாலிக் ஆகும். அவர்களின் தாயாரின் பெயர் நாயிலா பின்த் அபீ ஆஸிம் ஆகும். ஹஸ்ரத் உமைர் அவர்கள் அன்ஸார்களின் கோத்திரத்தைச் சார்ந்த ஹஸ்ரஜ் கோத்திரத்தைச் சார்ந்தவர்களாக இருந்தார்கள். ஹஸ்ரத் உமைர் அவர்கள் தனது அபூ தாவூது என்ற பட்டப்பெயராலும் பிரபல்யமடைந்திருந்தார்கள். பத்ர் மற்றும் உஹது போர்களில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் இணைந்து பங்கு பெற்றிருந்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 393 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸாபா தொகுதி 4 பக்கம் 598 – 1985 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உம்மே அம்மாரா அவர்கள் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் அபூ தாவூது மஃஸனி அதாவது ஹஸ்ரத் உமைர் மற்றும் ஹஸ்ரத் சுலைத் பின் அம்ர் இருவரும் உக்பா பைஅத்தில் கலந்து கொள்வதற்காகப் புறப்பட்டார்கள். அப்போது மக்கள் பைஅத் செய்து விட்டனர் என்று தெரிய வந்தது. அதன் பிறகு ஹஸ்ரத் அஸ்அது பின் ஸுராரா மூலமாக பைஅத் செய்தார்கள். அன்னார் உக்பாவின் இரவுக் கண்காணிப்பாளர்களில் ஒருவராக இருந்தார்கள். அன்னார் தலைவராக நியமிக்கப்பட்டிருந்தார்கள். எனவே அன்னார் மூலமாக அவர்கள் அனைவரும் பைஅத் செய்தார்கள். ஓர் அறிவிப்பின் அடிப்படையில் பத்ர் யுத்தத்தில் அபுல் பஹ்தரியை ஹஸ்ரத் உமைர் பின் ஆமிர் அவர்கள் கொன்றார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 92 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது

அடுத்த சஹாபி ஹஸ்ரத் சஅது மவ்லா ஹாதிப் பின் அபீ பல்தஆ ஆவார்கள். அன்னார் பனூ கல்ப் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் சஅது பின் ஹவ்லி ஹஸ்ரத் காத்திப் பின் பல்தஆ அவர்களால் விடுதலை செய்யப்பட்ட அடிமையாக இருந்தார்கள். ஹஸ்ரத் சஅது பின் ஹவ்லி அவர்கள் பனூ கல்ப் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஆனால் அபூ மஃஷர் அவர்களைப் பொருத்தவரை அன்னார் பனூ மஸ்ஹிஜ் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள்.

சில மக்களின் கருத்துப்படி அன்னார் பாரசீக வம்சத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் சஅது பின் ஹவ்லி ஹஸ்ரத் காத்திப் பின் அபீ பல்தஆ அவர்களிடம் அடிமையாகச் சென்றடைந்தார்கள். ஹஸ்ரத் காத்திப் பின் அபீ பல்தஆ அன்னாருடன் மிகவும் கருணையுடனும் அன்புடனும் நடந்து கொண்டார்கள். ஹஸ்ரத் சஅது ஹஸ்ரத் காத்திப் பின் பல்தஆ அவர்களுடன் பத்ர் மற்றும் உஹது போர்களில் பங்கு பெற்றார்கள். மேலும் உஹது போரில் அன்னார் ஷஹீதானார்கள். ஹஸ்ரத் உமர் அவர்கள் ஹஸ்ரத் சஅது அவர்களுடைய மகன் ஹஸ்ரத் அப்துல்லாஹ் பின் சஅது அவர்களுக்கு அன்ஸார்களுடன் உதவித் தொகையை நிர்ணயித்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 2 பக்கம் 428 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 85 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபி ஹஸ்ரத் ஸினான் பின் முஹ்ஸின் ஆவார்கள். அவர்களது தந்தையின் பெயர் முஹ்ஸின் பின் ஹிர்ஸான் ஆகும். அன்னாரது பட்டப்பெயர் அபூ ஸினான் ஆகும். அவர்களது பெயர் வஹப் பின் அப்தில்லாஹ் ஆகும். அவர்களது பட்டப்பெயர் அபூ ஸினான் ஆகும். அப்துல்லாஹ் பின் வஹப் என்றும் கூறப்படுகின்றது. இருப்பினும் சரியான அறிவிப்புகளின் அடிப்படையில் வரலாற்றில் அன்னாரது பெயர் வஹப் பின் முஹ்ஸின் என்று இடம்பெற்றிருக்கின்றது. ஹஸ்ரத் அபூ ஸினான் பின் முஹ்ஸின் ஹஸ்ரத் உக்காஷா பின் முஹ்ஸின் அவர்களின் சகோதரர் ஆவார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 153 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உக்காஷா பின் முஹ்ஸின் அவர்களின் மூத்த சகோதரர் ஆவார்கள். இது தொடர்பாகவும் அறிவிப்புகளில் இவ்வாறு வருகின்றது. அன்னார் உக்காஷா அவர்களை விட ஏறக்குறைய இரண்டு வருடங்கள் மூத்தவராக இருந்ததாகவும், சிலர் பத்து வருடங்கள் என்றும், சிலர் இருபது வருடங்கள் மூத்தவராக இருந்தார்கள் என்றும் கூறுகின்றனர்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 153 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அன்னாரது மகனின் பெயர் ஸினான் பின் அபூ ஸினான் ஆகும். பத்ர், உஹது மற்றும் அகழ் போர்களில் அன்னார் பங்கு பெற்றார்கள்.

சில அறிவிப்புகளின் அடிப்படையில் அன்னார் பைஅத்தே ரிஸ்வானில் அபூ ஸினான் பின் முஹ்ஸின் அஸதி அவர்கள் முதன் முதலில் பைஅத் செய்தவர்களாக இருந்தார் என்று கூறப்படுகிறது. ஆனால் இது சரியாத அறிவிப்பு அல்ல.

ஏனென்றால் ஹஸ்ரத் அபூ ஸினான் ஹிஜ்ரி ஐந்தாம் ஆண்டு பனூ குரைலா கோத்திரம் சுற்றி வளைக்கப்பட்டிருந்தபோது தமது

40 வது வயதில் மரணமடைந்து விட்டார்கள். மேலும் பைஅத்தே ரிஸ்வான் சந்தர்ப்பத்தின்போது பைஅத் செய்யக் கூடியவர்களின் அன்னாரின் மகன் ஹஸ்ரத் ஸினான் பின் அபூ ஸினான் அவர்கள் ஆவார்கள். ஹஸ்ரத் அபூ ஸினான் பின் முஹ்ஸின் அவர்களின் மரணம் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் பனூ குரைலா எனும் யூத கோத்திரத்தை சுற்றி வளைத்திருந்தபோது நிகழ்ந்தது. ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அன்னாரை பனூ குரைலாவின் கபருஸ்தானில் நல்லடக்கம் செய்தார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 69 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்து ஒரு சஹாபி ஹஸ்ரத் கைஸ் பின் அஸ் சகன் ஆவார்கள். அன்னாரின் பட்டப்பெயர் அபூ ஸைதாகும். ஹஸ்ரத் கைஸ் அவர்களின் தந்தையார் பெயர் சகன் பின் ஸவூர் ஆகும். அன்னார் ஹஸ்ரஜ் கோத்திரத்தின் கிளையான பனூ அதீ பின் நஜ்ஜார் கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார்கள். ஹஸ்ரத் கைஸ் அபூ ஸைது என்ற பட்டப்பெயரால் மிகவும் பிரபல்யமாக இருந்தார்கள். அன்னார் பத்ர் மற்றும் உஹது மற்றும் அகழ் போர் உட்பட அனைத்துப் போர்களிலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலகட்டத்தில் திருக்குர்ஆனைத் தொகுத்த சஹாபாக்களில் அன்னாரும் ஒருவர் ஆவார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 4 பக்கம் 406 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 389 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது & அஸாபா தொகுதி 5 பக்கம் 362 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அனஸ் பின் மாலிக் கூறுகின்றார்கள்: ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் காலத்தில் அன்ஸார்களில் நான்கு சஹாபாக்கள் திருக்குர்ஆனைத் தொகுத்தார்கள். அந்த நான்கு சஹாபாக்கள் ஸைது பின் சாபித், மஆஸ் பின் ஜபல், உபீ பின் கஅப் மற்றும் அபூ ஸைது ஆகியோர் ஆவர். அதாவது கைஸ் பின் சகன் மற்றும் அபூ ஸைது அவர்களைப் பற்றி ஹஸ்ரத் அனஸ் அவர்கள் கூறுகின்றார்கள்: அன்னார் எனது சிறிய தந்தை ஆவார்கள்.

(சஹீஹுல் புகாரி கிதாபுல் மனாகிப் அல் அன்ஸார் பாப் மனாகிக் ஸைது பின் சாபித் ஹதீஸ் எண் 3810)

ஹிஜ்ரி 8 ஆம் ஆண்டு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அபூ ஸைது அன்ஸாரி மற்றும் ஹஸ்ரத் அம்ர் பின் ஆஸ் அஸ்ஸஹமி ஆகியோரை உபைது மற்றும் ஜாஃபர் என்ற இரண்டு கோத்திரத்திடம் கடிதம் ஒன்றை கொடுத்து அனுப்பினார்கள். அதில் அவர்களுக்கு இஸ்லாத்திற்கான அழைப்பு இருந்தது. மேலும் இருவரிடமும் கூறினார்கள்:

அந்த மக்கள் உண்மைக்கான சாட்சியம் வழங்கினால் மேலும் அல்லாஹ் மற்றும் அவனது தூதருக்குக் கட்டுப்பட்டு விட்டால் அந்நிலையில் அம்ர் அவர்கள் அந்த மக்களின் அமீராக இருப்பார்கள். மேலும் அபூ ஸைது அவர்கள் அவர்களின் இமாமுஸ் சலாத்தாக இருப்பார்கள். அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் பார்வையில் அவர்களின் மார்க்க நிலை நன்றாக இருந்தது. திருக்குர்ஆனின் ஞானம் மிக அதிகமாக இருந்தது. எனவேதான் அவர் இமாமுஸ் சலாத்தாக இருப்பார்கள் என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள்.

மேலும் அந்த மக்களிடத்தில் இஸ்லாத்தை பரப்புவார்கள். மேலும் அவர்களுக்கு திருக்குர்ஆனின் போதனையை எடுத்துரைப்பார்கள் என்றும் கூறினார்கள். இவர்கள் இருவரும் அம்மான் என்ற அந்த இடத்திற்கு சென்றார்கள். உபைது மற்றும் ஜாஃபர் அவர்கள் கடற்கரை ஓரத்தில் சந்தித்தார்கள். அவர்களுக்கு ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கடிதம் கொடுக்கப்பட்டது. அவர்கள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள்.

பின்னர் அவர்கள் அங்கிருந்த அரபிகளுக்கு இஸ்லாத்திற்கான அழைப்பை கொடுத்தார்கள். அவர்களும் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். இவர்களின் தப்லீக்கின் மூலமாக இஸ்லாம் பரவியது. அங்கு சண்டைகளும், கொலைகளும் நடைபெறவில்லை. எவ்வாறிருப்பினும் அந்த அரபிகள் இஸ்லாத்தை ஒப்புக் கொண்டார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மரணமடையும் வரை அம்ர் மற்றும் அபூ ஸைது அமான் என்ற இடத்திலேயே இருந்தார்கள். சிலரின் பார்வையில் அபூ ஸைது அதற்கு முன்பாகவே மதீனாவிற்கு வந்து விட்டார்கள்.

(ஃபத்ஹுல் பத்ரான் பக்கம் 53 – 2000 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சடிக்கப்பட்டது)

ஹஸ்ரத் கைஸ் அவர்களின் ஷஹாதத் ஜஸர் தின சம்பவத்தன்று நிகழ்ந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 389 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் உமர் அவர்களின் கிலாஃபத் காலகட்டத்தில் ஈரானியர்களோடு நடந்த போரில் நதிக்கரையில் பாலம் ஒன்று கட்டப்பட்டது. அதன் அடிப்டையில் அது ஜஸர் தினம் என்று கூறப்படுகின்றது.

(மஜ்மவுல் பல்தான் தொகுதி 2 பக்கம் 162,163 'ஜஸர்' – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

அடுத்த சஹாபியின் பெயர் அபுல் யஸர் கஅப் பின் அம்ர் ஆகும். அவரது பட்டப்பெயர் அபுல் யஸர் ஆகும். அபுல் யஸர் பனூ சல்மா கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். அன்னாரின் தந்தையார் அம்ர் பின் இபாது ஆகும். தாயார் பெயர் நஸீபா பின்த் அல்ஹர் ஆகும். அவர் பனூ சலமா கோத்திரத்தைச் சார்ந்தவராக இருந்தார். அன்னார் பைஅத்தே உக்பாவிலும் பங்கு பெற்றிருந்தார். பத்ர் யுத்தத்திலும் பங்கு பெற்றிருந்தார். பத்ர் யுத்தத்தின் நாளன்று அன்னார் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களைக் கைது செய்தார்கள்.

அன்னார் பத்ர் யுத்தத்தில் இணை வைப்பவர்களின் கொடியை அபூ உஸைர் பின் உமைர் கைகளிலிருந்து பறித்த சஹாபி ஆவார்கள். அன்னார் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுடன் ஏனைய போர்களிலும் பங்கு பெற்றிருந்தார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்குப் பிறகு சஃபீன் போரிலும் ஹஸ்ரத் அலி அவர்களுடன் கலந்து கொண்டிருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 326,327 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களை பத்ர் யுத்தத்தில் கைதி செய்தவர் ஹஸ்ரத் உபைதா பின் அவ்ஸ் ஆவார்கள் என்று ஓர் அறிவிப்பில் வருகின்றது.

(அஸதுல் காபா தொகுதி 3 பக்கம் 528,529 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

எவ்வாறிருப்பினும் ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவித்துள்ளார்கள்:

பத்ர் போரின் நாளன்று ஹஸ்ரத் அப்பாஸ் (ரலி) அவர்களை கைது செய்த நபரின் பெயர் அபுல் யஸர் ஆகும். அபுல் யஸர் அப்போது மெலிந்த ஒல்லியான நபராக இருந்தார்கள். பத்ர் யுத்தத்தின்போது அன்னார் 20 வயது இளைஞராக இருந்தார்கள். ஆனால் ஹஸ்ரத் அப்பாஸ் அவர்கள் மிகவும் தடித்த உடலமைப்பை கொண்டவராக இருந்தார்கள்.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் ஹஸ்ரத் அபுல் யஸர் அவர்களிடத்தில் கேட்டார்கள்: நீங்கள் எப்படி ஹஸ்ரத் அப்பாஸ் அவர்களைக் கைது செய்தீர்கள்? நீங்கள் மிக மெலிந்த ஒல்லியான உடலை உடையவராகவும், அன்னார் மிக உயரமான மற்றும் தடித்த உடலமைப்பு கொண்டவராகவும் இருக்கின்றபோது நீங்கள் எப்படி அன்னாரை கைது செய்தீர்கள் என்று கேட்டார்கள்.

அதற்கு அன்னார், அல்லாஹ்வின் தூதர் அவர்களே! ஒரு நபர் எனக்கு உதவி செய்தார். அவரை நான் இதற்கு முன்பு பார்த்ததே இல்லை. அதற்குப் பின்பும் அவரை நான் கண்டதில்லை. அவரது உடல் அமைப்பு இவ்வாறு இவ்வாறு எல்லாம் இருந்தது என்று கூறினார். அதைக் கேட்ட ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நிச்சயமாக இந்த சம்பவத்தில் உங்களுக்கு கண்ணியத்திற்குரிய வானவர் ஒருவர் உதவி செய்துள்ளார் என்று கூறினார்கள்.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 4 பக்கம் 8 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் இப்னு அப்பாஸ் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பத்ர் போர் நாளன்று எவர் எதிரியை கொலை செய்வாரோ அவருக்கு இன்ன இன்ன வெகுமதிகள் உண்டு என்று ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறினார்கள். எனவே முஸ்லீம்கள் இணை வைக்கும் 70 நபர்களைக் கொன்றார்கள். மேலும் 70 இணை வைப்பவர்களை கைது செய்திருந்தார்கள். ஹஸ்ரத் அபுல் யஸர் இரண்டு கைதிகளைக் கொண்டு வந்தார்கள்.

மேலும் அல்லாஹ்வின் தூதர் அவர்களே! நீங்கள் எங்களிடத்தில் எவர் கொலை செய்வாரோ அவருக்கு இன்ன இன்ன வெகுமதிகள் உண்டு என்று வாக்குறுதி வழங்கினீர்கள் என்று கூறினார். மேலும் அதே போன்று எவர் கைதிகளைப் பிடித்து வருவாரோ அவருக்கும் இன்ன இன்ன வெகுமதிகள் உண்டு என்று கூறினீர்கள். நான் இரண்டு கைதிகளைக் கொண்டு வந்துள்ளேன் என்று கூறினார்கள்.

(அல் முன்ஸிஃப் அப்துர் ரஸாக் தொகுதி 5 பக்கம் 239... ஹதீஸ் எண் 9483)

ஓர் அறிவிப்பின் அடிப்படையில் பத்ர் யுத்தத்தில் அபுல் பஹ்தரியை ஹஸ்ரத் அபுல் யஸர் அவர்களே கொலை செய்திருந்தார்கள்.

(அஸதுல் காபா தொகுதி 6 பக்கம் 92 – 2003 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

ஹஸ்ரத் சலாமா பின்த் முஅக்கல் அவர்கள் அறிவிக்கின்றார்கள்:

நான் ஹுப்பாப் பின் அம்ர் அவர்களின் அடிமைப் பெண்ணாக இருந்தேன். அவர்கள் மூலமாக எனக்கு ஒரு மகன் பிறந்தான். அன்னார் மரணித்தபோது அன்னாரின் மனைவி என்னிடத்தில் கூறினார்கள். இனி நீங்கள் ஹப்பாப் அவர்களின் கடனிற்குப் பகரமாக விலைக்கு விற்கப்படுவீர்கள். அன்னார் அடிமைப் பெண்ணாக இருந்தார்கள். எனவே நீர் விற்கப்படுவீர்கள் என்று கூறப்பட்டது.

அன்னார் கூறுகின்றார்கள்: நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களிடத்தில் சென்றேன். அனைத்து நிலவரங்களையும் எடுத்துக் கூறினேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் மக்களிடத்தில் கேட்டார்கள். ஹபாப் பின் அம்ர் அவர்களின் சொத்துக்களின் பொறுப்பாளி யார் என்று கேட்டார்கள். அப்போது அபுல் யஸர் அதற்குப் பொறுப்பாளி ஆவார் என்று கூறப்பட்டது.

ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அவர்களை அழைத்தார்கள். மேலும் இந்த அடிமைப் பெண்ணை விற்க வேண்டாம். மாறாக, இவரை விடுதலை செய்து விடுங்கள் என்று கூறினார்கள். மேலும் என்னிடத்தில் வேறு அடிமைகள் கொண்டு வரப்படும்போது நீங்கள் என்னிடத்தில் வாருங்கள். நான் இவருக்குப் பகரமாக வேறொரு அடிமையை தந்து விடுகின்றேன் என்றும் கூறினார்கள்.

(முஸ்னது அஹ்மது பின் ஹம்பல் தொகுதி 8 பக்கம் 726 ஹதீஸ் எண் 27569)

ஆக, அவ்வாறே நடந்தது. அந்த அடிமைப் பெண்ணை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் விடுதலை செய்து அவருக்கு வேறொரு அடிமையை வழங்கி விட்டார்கள்.

ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற தமது நூலில் குறிப்பிடுகின்றார்கள்:

நாங்கள் ஒரு முறை ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபியான ஹஸ்ரத் அபுல் யஸர் அவர்களைச் சந்தித்தோம். அப்போது அவர்களுடன் அன்னாரின் ஓர் அடிமையும் இருந்தார். மேலும் மிகவும் ஒரு தடித்த யமன் நாட்டுப் போர்வையும் அன்னாரின் உடலில் போர்த்தப்பட்டிருந்ததை நாங்கள் கண்டோம். அதேபோன்று ஒரு தடித்த போர்வையும், யமன் நாட்டுப் போர்வையும் அன்னாரது அடிமையின் உடலில் போர்த்தப்பட்டிருந்தது.

அதற்கு சிறிய தந்தையாரே! நீங்கள் உங்களிடமுள்ள போர்வையை அடிமைக்கு கொடுத்து விட்டு அடிமையிடம் இருக்கின்ற அந்த போர்வைகளை நீங்கள் ஏன் எடுத்துக் கொள்வதில்லை என்று கேட்டோம். இதன் மூலம் தனித்தனியான போர்வையாக உங்கள் இருவரிடமும் இருக்குமே என்றும் கேட்டோம்.

அறிவிப்பாளர் கூறுகின்றார்: அதற்கு அபுல் யஸர்அவர்கள், எனது தலையில் கையை தடவினார்கள். பின்னர் எனக்காக துஆ செய்தார்கள். மேலும் என்னிடத்தில் எனது அண்ணன் மகனே! எனது இந்த கண்கள் கண்டன. மேலும் எனது காதுகள் கேட்டன. மேலும் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறிய இந்த கூற்றை எனது உள்ளம் பதிந்து வைத்திருக்கின்றது.

அதாவது ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள், நீங்கள் உங்களது அடிமைகளுக்கு நீங்கள் உண்பதையே உண்ணக் கொடுங்கள். நீங்கள் பருகுவதையே அவர்களுக்கும் பருகக் கொடுங்கள். மேலும் நீங்கள் அணிவதையே அவர்களுக்கும் அணியக் கொடுங்கள் என்று கூறினார்கள். எனவே நான் உலகச் செல்வங்களில் எனது அடிமைகளுக்குச் சமமான பங்கை கொடுப்பதையே நான் விரும்புகின்றேன். ஏனென்றால் கியாமத் நாளன்று எனது கணக்கில் நற்கூலிகளில் எந்த குறைவும் ஏற்பட்டு விடக்கூடாது என்று நான் அஞ்சுகின்றேன்.

(ஹஸ்ரத் மிர்ஸா பஷீர் அஹ்மது சாஹிப் (ரலி) அவர்கள் எழுதிய சீரத் காத்தமுன் நபிய்யீன் என்ற நூல் பக்கம் 383)

ஆக, அல்லாஹ் திருப்தியடைந்த மக்கள் இவர்களே ஆவர். இவர்களே ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் வழிகாட்டுதல்களை நுட்பமான பார்வையுடன் பார்த்தார்கள். மேலும்

அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவதற்கு எந்நேரமும் நிம்மதியற்றவர்களாக இருந்தார்கள். இன்னும் சொல்வதென்றால், அதற்குப் பசியுடையவர்களாக இருந்தார்கள்.

ஹஸ்ரத் அபுல் யஸர் அவர்கள் அறிவிக்கின்றார்கள்: பனூ ஹராமின் ஃபலான் பின் ஃபலான் அவர்களிடத்தில் எனது செல்வம் இருந்தது. நான் கொஞ்சம் பணம் கொடுத்திருந்தேன். அவர் எனக்கு கடன் கொடுக்க வேண்டியதிருந்தது. நான் அவருடைய வீட்டிற்குச் சென்றிருந்தேன். மேலும் நான் ஸலாம் கூறினேன். அவர் எங்கே என்று நான் கேட்டேன். அதற்கு அவர் இங்கே வீட்டில் உள்ளாரா? இல்லையா? என்றும் கேட்டேன்.

அதற்கு வீட்டில் இல்லை என்று பதில் கிடைத்தது. பின்னர் பருவ வயதை அடைய இருந்த அவரது மகன் என்னிடத்தில் வந்தான். நான் அவனிடத்தில் உனது தந்தை எங்கே? என்று கேட்டேன். அதற்கு அவன் உங்களது குரல் கேட்டதும் வீட்டில் ஒளிந்து கொண்டார். நான் அந்த கட்டிலுக்குப் பின்னால் சென்று பார்த்தேன். நீங்கள் வெளியே வாருங்கள் என்று மீண்டும் கூறினேன். நீங்கள் எங்கே இருக்கின்றீர்கள் என்பது எனக்குத் தெரிந்து விட்டது என்றும் அந்த கடனாளியை நோக்கி நான் கூறினேன்.

அபுல் யஸர் கூறுகின்றார்கள்: அவர் வெளியே வந்தார். அப்போது நான் அவரிடத்தில் நீங்கள் ஏன் ஒளிந்து கொண்டீர்கள் என்று கேட்டேன். அதற்கு அவர் அல்லாஹ்வின் மீது ஆணையாக நான் கூறுகின்றேன் என்றும் நான் உங்களிடம் பொய் பேச மாட்டேன் என்றும் கூறினார். அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் உங்களிடத்தில் ஒன்றை கூறிப் பின்னர் பொய் பேசி வாக்குறுதி அளித்து அந்த வாக்குறுதிக்கு மாற்றமாக நடப்பதிலிருந்து அஞ்சுகின்றேன். நான் உங்களிடம் வந்து சரி ஆகட்டும்.

இந்த நாளில் இந்த நேரத்தில் உங்களுக்கு நான் பணத்தைத் தந்து விடுகின்றேன் என்று கூறி விட்டு வாக்குறுதிக்கு மாற்றமாக நடப்பதையும் பொய் பேசுவதையும் நான் விரும்பவில்லை. அப்போது நீங்கள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் சஹாபி ஆயிற்றே என்று கூறப்பட்டது.

அல்லாஹ்வின் மீது ஆணையாக! நான் தேவையுடையவனாக இருக்கின்றேன் என்று அவர் கூறினார். அதற்கு அபுல் யஸர் அவர்கள், அல்லாஹ்வின் மீது ஆணையாகவா? என்று கேட்டார்கள். அதாவது அல்லாஹ்வின் மீது ஆணையிட்டு உண்மையாகவே நீங்கள் சத்தியம் செய்கின்றீர்களா? என்று அவர்கள் கேட்டார். அதற்கு அவர் ஆம்! அல்லாஹ்வின் மீது ஆணையாக என்று கூறினார். அதற்கு நான் அல்லாஹ்வின் மீது ஆணையாகவா? என்று கேட்டேன். நீங்கள் ஏழையாக இருக்கின்றீர்கள் என்று அல்லாஹ்வின் மீது சத்தியம் செய்து கூறுகின்றீர்களா? என்று கேட்டேன். அதற்கு அவர், ஆம் அல்லாஹ்வின் மீது ஆணையாக என்று கூறினார். பிறகு நான் மூன்றாவது முறையாக அல்லாஹ்வின் மீது ஆணையாகவா? என்று கேட்டேன். அதற்கு அவர் ஆம். அல்லாஹ்வின் மீது ஆணையாக என்று பதிலளித்தார்.

அபுல் யஸர் அவர்கள் அந்நேரத்தில், தமது பத்திரத்தை எடுத்து வந்தார்கள். பின்னர் தனது கரத்தால் கடன் திருப்பிக் கொடுக்க வேண்டிய அந்த வாசகங்களை அழித்து விட்டார்கள். அதை அழித்து விட்டுக் கூறினார்கள்: உங்களுக்கு வாய்ப்புப் கிடைத்தால் அதைத் திருப்பி அளித்து விடவும். இல்லையென்றால் நீங்கள் சுதந்திரமானவராவீர்கள் என்று கூறினார்கள்.

நான் சாட்சியம் கூறுகின்றேன். எனது இந்த இரண்டு கண்களின் பார்வைப்புலனும், எனது இரண்டு காதுகளின் செவிபுலனும், எனது உள்ளமும் இந்த சம்பவத்தை நன்றாக நினைவில் வைத்துள்ளது. அன்னார் தனது உள்ளத்தை நோக்கி சைகை செய்து கூறினார்கள்: நான் நாட்சியம் கூறுகின்றேன். நான் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களை பத்திரத்தின் வாசகங்களை அழித்தபோது பார்த்துக் கொண்டிருக்கின்றேன். மேலும் அவரை கடன் சுமையிலிருந்து விடுதலை செய்தேன். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் அப்போது கூறினார்கள்: எவர் ஒருவர் வறியவருக்குக் காலக்கெடு வழங்கினாரோ அல்லது அவரின் அனைத்துக் கடன் சுமையையும் மன்னித்து விட்டாரோ அவருக்கு அல்லாஹ் தனது நிழலில் இடமளிப்பான்.

(சஹீஹ் முஸ்லிம்... ஹதீஸ் எண் 7512)

எனவே நான் உங்களது கடனை மன்னித்து விட்டேன். ஏனென்றால் எனக்கு அல்லாஹ்வின் நிழலின் தேட்டம் உள்ளது. இது அல்லாஹ்வின் மீதுள்ள அச்சத்திற்கான மற்றும் ஓர் உதாரணமாகும். இந்த சஹாபாக்களுக்கு ஆசைகள் இருந்தன என்றால் அல்லாஹ்வின் திருப்தியைப் பெற வேண்டும் என்பதாகவே இருந்தன. உலக செல்வங்களின் மீது அவர்களுக்கு ஆசைகள் இருந்ததில்லை.

ஹஸ்ரத் அபுல் யஸர் கஅப் பின் அம்ர் அவர்கள் ஹதீஸ்களை அறிவிப்பதில் மிகவும் கவனமாகச் செயல்பட்டார்கள். ஒருமுறை உபாதா பின் வலீத் அவர்களிடமிருந்து இரண்டு ஹதீஸ்களை அறிவித்தார்கள். அப்போது அவர்களின் நிலை என்னவாக இருந்தது என்றால், கண்ணிலும், காதிலும் விரல் வைத்து கூறினார்கள்: இந்த கண்கள் இந்த சம்பவத்தைக் கண்டன. இந்த காதுகள் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் கூறியதை செவியுற்றன.

(சஹீஹ் முஸ்லிம்.... ஹதீஸ் எண் 7512, 7513)

ஹஸ்ரத் அபுல் யஸர் அவர்களின் ஒரு மகனின் பெயர் உமைர் ஆகும். உம்மே அம்ர் அவர்களின் வயிற்றில் பிறந்தார்கள். ஹஸ்ரத் உம்மே அம்ர் ஹஸ்ரத் ஜாபிர் பின் அப்தில்லாஹ்வின் பெரியன்னை ஆவார்கள். அன்னாரின் ஒரு மகன் யஸீத் பின் அபீ யஸ்ர் ஆவார்கள். அன்னார் லபாபா பின்த் ஹாரிஸ் அவர்களின் வயிற்றில் பிறந்த ஒரு மகனின் பெயர் ஹபீப் ஆகும். அன்னாரின் தாயார் உம்மே வலத் ஆவார்கள். ஆயிஷா என்ற ஒரு மகளும் இருந்தார்கள். அன்னாரின் தாயாரின் பெயர் உம்முர் ரியாஃ ஆகும். அன்னார் பத்ர் யுத்தத்திலும் பங்கு பெற்றிருந்தார்கள். அப்போது அவர்களது வயது 20 ஆக இருந்தது. ஹஸ்ரத் ஆமிர் முஆவிய்யாவின் காலகட்டத்தில் ஹிஜ்ரி 55–வது ஆண்டில் அன்னாரின் மரணம் நிகழ்ந்தது.

(அத்திப்காத்துல் குப்ரா தொகுதி 3 பக்கம் 436 – 1990 ஆம் ஆண்டு பைரூத்திலுள்ள தாருல் குதுபுல் இல்மிய்யாவில் அச்சிடப்பட்டது)

இந்த மக்கள் கண்ணியமுடையவர்களாக திகழ்ந்தார்கள். அவர்கள் நமக்கு அல்லாஹ்வுடன் நன்றியுணர்விற்கான வழிகளையும், அல்லாஹ்வின் மீதான அச்சத்திற்கான வழிகளையும் கற்றுத் தந்துள்ளார்கள். ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களின் கூற்றுகளை உள்ளத்தில் ஆழத்தால் ஒப்புக் கொண்டவாறு முழுமையாக கட்டுப்படுதலுக்குரிய வழிமுறைகளை கற்றுக் கொடுத்தார்கள். அல்லாஹ் அவர்களின் அந்தஸ்தை உயர்த்துவானாக.

**திருக்குர்ஆனிலிருந்து....**

நிச்சயமாக அல்லாஹ் சிறிதளவும் மக்களுக்கு அநீதி இழைப்பதில்லை. மாறாக, மக்கள் தமக்குத்தாமே அநீதி இழைத்துக் கொள்கின்றனர். (10:45)

**:.பைஸல் ஹமீது இலாஹி**

மற்றும் குடும்பத்தினர், திட்டச்சேரி.

EDITOR
Moulvai.O.M. MUZZAMMIL AHMAD
Mobile : + 91 98885-67232
SUB EDITOR
Muallim. A. KHALEEL AHMAD
E-mail : editorbadrtamil@gmail.com
Website : www.akhbarbadrqadian.in
www.alislam.org/badr

REGISTERED WITH THE REGISTRAR OF THE NEWSPAPERS FOR INDIA AT NO PUNTAM/2016/68785

Weekly BADAR Qadian — பதர் வாரப் பத்திரிகை காதியான்

Distt. Gurdaspur (Pb.) INDIA Qadian - 143516

Postal Reg.No. GDP-39/2017-2019 Vol. 4 Thursday 28 February 2019 Issue No. 9

MANAGER
NAWAB AHMAD
Tel. : +91 1872-224757
Mobile : +91 94170- 20616
E-mail : managerbadrqnd@gmail.com

ANNUAL SUBSCRIPTION : Rs.500/- (Per Issue Rs. 9/-) (WEIGHT - 20-50 gms/issue)

*(முதல் பக்கத்தின் தொடர்ச்சி...)*

எரிந்து கொண்டிருக்கின்ற நெருப்பின் வாழ்க்கையை வாழ்வாரா? ஒரு ஆட்சியாளரின் நண்பர் உலகத் தொடர்பின் காரணமாக எல்லா விதமான சொர்க்கத்தின் வாழ்க்கையை வாழ்கின்றார். அவ்வாறிருக்கும்போது அல்லாஹ்வின் நண்பர்களுக்காக ஏன் சுவர்க்கத்தின் வாசல் கதவுகள் திறக்கப்படக் கூடாது. உலகம் சோதனை மற்றும் கஷ்டம் நிறைந்ததாக இருக்கிறது.

ஆனால் அவர் எத்தகைய இன்பத்தை மேற்கொள்கின்றார் என்பதை யார்தான் அறிவார்? அவருக்கு ஏதாவது துன்பம் ஏற்படுகின்றது என்றால் அரை மணி நேரம் கூட அந்த துன்பத்தை அவர் மேற்கொள்வது கடினமாகும். ஏனென்றால் அவர் தமது முழு வாழ்நாளும் துன்பத்திலேயே இருக்கின்றார். ஒரு காலகட்டத்திற்கான ஆட்சியை அவருக்குக் கொடுத்து அவரைப் பணி செய்வதிலிருந்து தடுத்தால் அவர் எவருடைய பேச்சையாவது செவியேற்பாரா? இவ்வாறே சோதனையின் மலையே அவர்கள் மீது விழுந்தாலும் அவர்கள் தமது எண்ணத்தை விட்டு விடுவதில்லை.

**முழுமையான நல்லொழுக்கத்தின் முன்மாதிரியை வெளிப்படுத்துதல்**

முழுமை பெற்ற நமது வழிகாட்டிக்கு இந்த இரண்டு விஷயங்களையும் பார்க்க நேர்ந்தது. ஒரு நேரத்தில் தாயிஃபில் அவர்கள் மீது கற்கள் எறியப்பட்டன. ஒரு பெரிய ஜமாஅத் அவர்களுக்கு கடுமையான உடல் ரீதியிலான துன்பத்தை கொடுத்தது. ஆனால் பெருமானார் (ஸல்) அவர்களது நிலைத்து நிற்றலில் எவ்வித மாற்றமும் ஏற்படவில்லை. சமுதாயத்தைச் சேர்ந்தவர்கள் அவர்கள் மீது இழைத்த துன்பங்கள் மற்றும் கடுமைகள் ஆகியவற்றினால் அவர்களிடம் எந்த மாற்றமும் ஏற்படவில்லை என்பதைப் பார்த்தபோது அவர்கள் அனைவரும் ஒன்றிணைந்து அரசாட்சியைத் தருவதாக வாக்குறுதி அளித்தனர். தமது அமீராக நியமிக்க விரும்பினார்கள். எல்லா விதமான நிம்மதிக்குரிய பொருள்களையும் ஏற்படுத்தித் தருவதற்கான வாக்குதியை வழங்கினார்கள். எதுவரை என்றால் மிகச் சிறந்த பெண்களை வழங்குவதாக வாக்குறுதி அளித்தனர்.

ஆனால் அவர்கள் வைத்த ஒரே நிபந்தனை என்னவென்றால் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்கள் சிலைகளை ஏசிப்பேசுவதை விட்டு விட வேண்டும். எவ்வாறு தாயிஃப் துன்பத்தின் போது அன்னார் எதனையும் பொருட்படுத்தவில்லையோ அவ்வாறே இந்த அரசாட்சியைத் தருவதற்கான வாக்குறுதியின் போதும் எதையும் பொருட்படுத்தவில்லை. மேலும் கல்லினால் அடி வாங்குவதற்கு முன்னுரிமை வழங்கினார்கள். ஆக எப்போது வரை ஒரு குறிப்பான இன்பம் இதில் இருப்பதில்லையோ அதுவரை ஏன் நிம்மதியான வாழ்க்கையை மேற்கொள்வதை விட்டு விட்டு துக்கத்திற்குரிய வாழ்க்கையை மேற்கொள்ள என்ன அவசியம் ஏற்பட்டு விட்டது?

இந்த நபித்துவ பணியை விட்டு விட வேண்டும் என்ற வாக்குறுதி வழங்கப்பட்ட இந்த சந்தர்ப்பம் பெருமானார் (ஸல்) அவர்களைத் தவிர வேறு எந்த நபிக்கும் கிடைக்கவில்லை. ஈஸா (அலை) அவர்களுக்கும் கூட இதற்கான வாய்ப்பு கிடைக்கவில்லை. உலக வரலாற்றில் ஹஸ்ரத் நபிகள் நாயகம் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே நீங்கள் உங்களது பணியை விட்டு விட்டால் அரசாட்சியைத் தருவதாக வாக்குறுதி அளிக்கப்பட்ட இந்த சம்பவம் நிகழ்ந்தது. ஆக இந்த கண்ணியம் நமது ரஸூல் (ஸல்) அவர்களுக்கு மட்டுமே உரிய குறிப்பான ஒன்றாகும். அவ்வாறே நமது முழுமையான வழிகாட்டிக்கு மட்டுமே இந்த இரண்டு காலகட்டங்களிலும் தமது முழுமையான நல்லொழுக்கத்தின் முன்மாதிரியை வெளிப்படுத்திக் காட்டுவதற்கான வாய்ப்புக் கிடைத்தது. அதாவது துன்பத்திற்கான காலகட்டமும், வெற்றிக்கான காலகட்டமும் கிடைத்தது.

அல்லாஹ் இறையச்சமுடையவர்களுக்காக அவர்கள் இந்த இரண்டு வகையான இன்பத்தையும் பெற வேண்டும் என்று விரும்பினான். சில நேரங்களில் உலக இன்பங்கள் நிம்மதி என்ற வடிவிலும் சில நேரங்களில் கஷ்டம் மற்றும் சோதனையின் வடிவிலும் வெளிப்பட்டன. இதன் மூலம் இந்த இரண்டு சந்தர்ப்பங்களிலும் முழுமையான நல்லொழுக்கத்தை வெளிப்படுத்திக் காட்ட வேண்டும் என்பதற்காக அல்லாஹ் அவ்வாறு நாடினான்.

ஆற்றல் பெற்றிருக்கும்போது சில நல்லொழுக்கங்களும், சோதனையின்போது சில நல்லொழுக்கங்களும் வெளிப்படுகின்றன. நமது நபி (ஸல்) அவர்களுக்கு இந்த இரண்டு சந்தர்ப்பமும் கிடைத்தன. மஸீஹ் (அலை) அவர்களிடம் அடி வாங்கிக் கொண்டே இருக்க வேண்டும் என்ற வெறும் பொறுமையை வெளிப்படுத்தும் சந்தர்ப்பமே தென்படும். ஆனால் அவர்களுக்கு ஆற்றல் கிடைத்தது என்பது எதிலிருந்து தெரிய வரும்? அந்த நபி எவ்வித சந்தேகமுமின்றி உண்மையாளர் ஆவார். ஆனால் அவரது எல்லா விதமான நல்லொழுக்கங்களும் நிரூபிக்கப்படவில்லை.

திருக்குர்ஆனில் அவர்களைப் பற்றிய குறிப்பு இருப்பதனால் நாம் அவர்களை ஏற்றுக் கொள்கின்றோம். அது அல்லாமல் வலிமை வாய்ந்த நபிமார்களிடம் இருக்கின்ற கண்ணியம் தொடர்பான எந்தவொரு விஷயமும் அவர்களிடம் இருப்பதாக இஞ்சீலில் குறிப்பு இல்லை. இதுபோன்று முழுமையான நமது வழிகாட்டியும் ஆரம்பத்தில் 13 ஆண்டுகளில் இழைக்கப்பட்ட சோதனைகளிலேயே மரணித்திருந்தால் அவர்களுடைய பல நல்லொழுக்கங்கள் மஸீஹ் (அலை) அவர்களைப் போன்று நிரூபணமாகி இருக்காது.

ஆனால் வெற்றியின் மற்றொரு காலகட்டம் வந்தபோது குற்றமிழைத்தவர்கள் அன்னார் முன் கொண்டு வரப்பட்டனர். இதிலிருந்து அன்னாரது கருணை மற்றும் மன்னிக்கும் தன்மை ஆகியவற்றிற்கான பண்பு நிரூபணமாகின்றது.

மேலும் இதிலிருந்து நிரூபணமாவது என்னவென்றால், அன்னாரது எந்தப் பணியும் எந்தப் பலவந்தத்தாலும் செய்யப்பட்டதல்ல. மாறாக, ஒவ்வொரு விஷயமும் அன்னாரது இயல்பில் இருந்ததற்கேற்பவே இருந்தது. அவ்வாறே பெருமானார் (ஸல்) அவர்களது பெரும்பான்மையான நல்லொழுக்கங்களும் நிரூபிக்கப்பட்டுள்ளது.

ஆக அல்லாஹ் نَحۡنُ اَوۡلِيٰٓؤُكُمۡ فِي الۡحَيٰوةِ الدُّنۡيَا وَفِي الۡاٰخِرَةِ அதாவது நாம் இந்த உலகிலும் மறு உலகிலும் இறையச்சமுடையவர்களுக்கு நண்பனாவோம் என்று கூறியிருப்பது நமது வாழ்க்கைளில் மலக்குமார்கள் இறங்குவதில்லை என்று பொய்யுரைக்கின்ற அந்த அறிவினர்களுக்கு மறுப்பாக இருக்கின்றது. மலக்குமார்கள் உயிரை எடுப்பதற்காக மட்டுமே வருகின்றனர் என்றால் இவ்வுலகில் எவ்வாறு இறைவன் நண்பனாக முடியும்?

(மல்ஃபூஸாத் தொகுதி 1 பக்கம் 10 –12)

Printed & Published by: Jameel Ahmed Nasir on behalf of Nigran Board of Badar. Name of Owner: Nigran Board of Badar. And Printed at Fazle-Umar Printing Press, Harchowal Road, Qadian, Distt. Gurdaspur-143516, Punjab. And published at office of Weekly Badar Mohallah - Ahmadiyya, Qadian, Distt. Gsp-143516, Punjab. India. Editor: Muzzammil Ahmad